නාවෙළි

NAAVELI

# நாவெளி

நாவிதன்வெளி பிரதேச செயலக மாதாந்த மின்னிதழ்

නාවිදන්වෙලි ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලයේ මාසික ඉ - සඟරාව

NAVITHANVELI DIVISIONAL SECRETARIAT MONTHLY E-MAGAZINE

www.navithanveli.ds.gov.lk moha.divi.navithanveli@gmail.com DSNavithanveli 0755424333

மலர்: 16 ✦ இதழ்: 37 ✦ 2025ஆம் வருடம் ✦ சித்திரை மாதம் ✦ இருபத்தைந்தாம் திகதி





கையளிக்கப்பட்ட சேவைப்பிரிவு 12





சித்திரை விற்பனைக்கூடம் 13





உபகரணங்கள் வழங்கி வைப்பு 14






காலாண்டுக்கான கலந்துரையாடல் 15






நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு



| | |
|---|---|
| அபிவிருத்திப் பாதையில் | 04 |
| சமயம் | 06 |
| பொருண்மியம் | 07 |
| கதைச்சாரம் | 08 |
| முதலாம் பக்கத்தொடர் | 12 |
| அறிவுக் களஞ்சியம் | 18 |
| குறுக்கெழுத்துப் போட்டி | 21 |
| சட்டம் | 22 |
| மாணவர் அரங்கம் | 24 |
| மானுடம் | 25 |
| கல்விப்பாதை | 28 |
| சமூகம் | 32 |
| மருத்துவமும் நாமும் | 34 |
| கதம்பம் | 35 |
| கவிதைச்சாரல் | 36 |
| படலையைத் தேடி | 37 |

# ஆசிரியரிடமிருந்து...

நாவெளி மலர் - 16இல் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வருடத்தின் நான்காவது மலராக பல்வேறு செய்திகள், மற்றும் பல்சுவை அம்சங்களைத் தாங்கிய வகையில் நாவெளி மலர் - 16 இம்மாதமும் உங்களுக்காகப் புதுப் பொலிவு பெற்று வெளிவருகின்றமை மகிழ்வளிக்கின்றது. இத்தகைய மகிழ்வினைத் தந்து கொண்டிருக்கும் "நாவெளி" இன் சொந்தங்கள் அனைவருக்கும் அன்பான நன்றிகளும், பாராட்டுகளும் உரித்தாகட்டும்.

இந்த இதழில் பொறுமை எனும் வாழ்வியல் கலை பற்றிக் கூற விளைகின்றேன். ஒருமுறை கடவுளைச் சந்தித்த இளைஞன் ஒருவர் "உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் என்பது எவ்வளவு மதிப்புடையது" என்று கேட்டாராம். அதற்கு கடவுள் ஒரு ரூபாய் என்றாராம். மீண்டும் இளைஞன் "ஒரு தசாப்தம் என்பது எவ்வளவு நாள் என்று கேட்டாராம். அதற்கு கடவுள் ஒரு நிமிடம் என்றாராம்.

அதற்கு மேல் இளைஞனால் கேள்வி ஒன்றையும் கேட்க முடியவில்லை. "சரி உங்கள் கணக்கில் ஒரு ரூபாய் எனக்குத் தாருங்கள்" என்றாராம். அதற்கு கடவுள் "அப்படியே ஆகட்டும். என் கணக்கில் ஒரு நிமிடம் ஓய்வில்லாமல் கடுமையாக உழை" என்று சொல்லிவிட்டுச் சென்றாராம் கடவுள்.

பொறுமை என்பது காத்திருத்தல் மட்டுமல்ல. காத்திருக்கும் நேரத்தில் நாம் எவ்வாறு நடந்து கொள்கிறோம் என்பதும்தான் என்பார்கள் விபரம் தெரிந்தவர்கள். இன்றைக்கு இளைஞர்களிடம் மட்டுமல்ல வயதில் மூத்தவர்களிடமும் கூட பொறுமையாக இருக்கும் அல்லது காத்திருக்கும் நேரத்தில் அமைதியாக இருப்பது என்பதைப் பார்ப்பது நமக்கெல்லாம் அரிதாகவே இருக்கின்றது.

அவசர யுகத்தில் வாழும் இளையோருக்கு காத்திருத்தல் என்பது கைவர வேண்டும் என்றால், அதற்கான தயாரிப்பில் ஒவ்வொரு நாளும் அவர்கள் ஈடுபடவேண்டியது அவசியமாகின்றது. தேவையான அனைத்தும் உடனுக்குடன் கிடைக்கும் இளையோருக்கு பொறுமையின் அருமை புரியாது. இதனை உணர்த்த வேண்டிய அவசியம் பெற்றோருக்கும் சமூகத்திற்கும் நிறையவே உள்ளது. பொறுமை பற்றிக் கற்றுக் கொள்வதற்கு பல்வேறு அறிஞர்களின் வாழ்வியல் நெறிகளை அறிந்து கொள்வர். இதனால் பொருள்களின் அருமை புரியவரும். அவ்வாறு புரிந்து கொள்ளும் பயிற்சியானது அவர்களுக்கு இயல்பில் பல்வேறு விடயங்களைப் பொறுமையாய் அணுகும் கலையையும் கற்றுக் கொடுக்கும்.

நாட்டின் அரசர் ஒருவர் போர் வீரன் போல் உடை அணிந்து வேட்டைக்குச் சென்று இருந்தார். மலையின் உச்சியினை அடைந்த போது அங்கு ஒரு குடிசையில் மூதாட்டி ஒருவர் இருப்பதைக் கண்டார். அந்த மூதாட்டியும் வந்தவரை வரவேற்று உணவு பரிமாறினார். உணவு சூடாக இருந்திருக்கிறது. இதனை அறியாத அரசர் உணவில் கை வைத்து சுட்டுக்கொண்டார். இதைப் பார்த்த அம்மூதாட்டி "உங்கள் அரசர் போலவே உனக்கும் பொறுமை இல்லை போலிருக்கிறது. கையைச் சுட்டுக் கொண்டாயே" என்றாராம். உடனே அவர் தான் அரசர் என்பதைக் காட்டிக் கொள்ளாமல், "ஏன் அவ்வாறு சொல்கிறீர்கள்" என்று கேட்டிருக்கிறார்.

"உங்கள் அரசரின் எதிரிகளுக்கு எவ்வளவோ சிறு சிறு கோட்டைகள் உள்ளன. அவற்றையெல்லாம் ஒவ்வொன்றாகப் பிடித்துக் கொண்டு பெரிய கோட்டைக்குச் செல்லாமல், எடுத்த எடுப்பில் பெரிய கோட்டையைப் பிடிக்கச் செல்கிறார். இதனால் எவ்வளவு போர் வீரர்களின் உயிரை இழக்க வேண்டியுள்ளது. சிறு சிறு கோட்டைகளைப் பிடித்தால் அதில் இருக்கும் கைதிகளைக் கொண்டே பெரிய கோட்டையை எளிதாகப் பிடிக்கலாம் அல்லவா? அவர் எங்கே இப்படி யோசிக்கிறார். நீ சூடான உணவில் நேரடியாகக் கை வைப்பது போல், அவரும் செயல்படுகின்றார். சுற்றிலும் ஆறியிருக்கும் உணவைச் சாப்பிடச் சாப்பிட, நடுவில் இருக்கும் உணவு ஆறும் என்ற அடிப்படை அறிவு கூட உனக்குத் தெரியவில்லையே" என்றாராம் அம்மூதாட்டி. பின்னர் அந்த அரசர் என்ன செய்திருப்பார் என்று நமக்கு புரிகிறது அல்லவா?

பொறுமையைக் கையாள்வது அவ்வளவு எளிதில் வாய்க்கும் கலையல்ல. ஆனால் தொடர்ச்சியான பயிற்சியின் மூலம் ஒருவருக்கு பொறுமை கைவரப்பெற்றால் அவருக்கு வேறு எந்த அணிகலனையும் விட சிறப்பான, அழகையும், தகுதியையும் கொடுக்கும். இதற்கான பயிற்சிக் களங்களாக குடும்பங்களும், பாடசாலைகளும், சமூகமும் அமைய வேண்டும்.

நமக்கு வசதியும், வாய்ப்பும் இருக்குமானால் எவ்வளவு நபர்களுக்கு வேண்டும் என்றாலும் சுடச்சுட சமைத்து விடலாம். தயிர் வேண்டுமென்றால் அதற்கான தயாரிப்பில் முதல் நாளே ஈடுபட வேண்டும். அதே போல் இரவு முழுவதும் விழித்திருந்தாலும் கூட மலர் மலர்வதை நம்மால் காண இயலாது. ஆனால் காலையில் பூத்து மணம் வீசும் போதுதான் மொட்டின் பொறுமையான மலர்ச்சி நமக்கு விளங்குகின்றது.

ஒரு கண நேரப் பொறுமை பேரழிவைத் தடுக்கவும் செய்யும், ஒரு கண நேரப் பொறுமையின்மை மொத்த வாழ்வையும் கூட அழிக்கும் என்பது சீனப் பழமொழி. எனவே, பொறுமையைக் கடைப்பிடியுங்கள். சாதனைகளை அவதானமாகச் செய்யுங்கள்.

என்றும் அன்புடன் - ஆசிரியர்.



# ஆடு வளர்ப்புத் தொழிலும் நாவிதன்வெளி பிரதேச செயலகமும்

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆடு வளர்ப்பு ஒரு தொன்மையான மற்றும் முக்கியமான வாழ்வாதார முறையாகத் திகழ்கிறது. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில், விவசாயத்துடன் பின்னிப்பிணைந்த ஒரு துணைத் தொழிலாகவும், நிலமற்ற மற்றும் குறைந்த வருமானம் உடைய குடும்பங்களுக்கு பிரதான வருமான ஆதாரமாகவும் இது விளங்குகிறது. நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவும் இதற்கு விதிவிலக்கல்ல. இப்பகுதியில் ஆடு வளர்ப்பின் தற்போதைய நிலை, அதன் சாத்தியப்பாடுகள், சுற்றுச்சூழல் மற்றும் நடைமுறைச் சவால்கள், பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மக்களின் சீவனோபாயத்தில் இதன் பங்கு ஆகியவற்றை விரிவாக ஆராய்வது காலத்தின் தேவையாகும்.

கிழக்கு மாகாணத்தின் நிலவியல் மற்றும் காலநிலை ஆடு வளர்ப்புக்குப் பெரிதும் சாதகமாக அமைந்துள்ளது. வறண்ட மற்றும் அரை வறண்ட பிரதேசங்கள், பரந்து விரிந்த மேய்ச்சல் நிலங்கள் ஆடுகளின் இயற்கையான வளர்ச்சிக்கு உகந்த சூழலை வழங்குகின்றன. உள்ளூர் ஆட்டு இனங்கள் இப்பகுதியில் பரவலாக வளர்க்கப்படுகின்றன. ஆட்டு இறைச்சி மற்றும் பாலுக்கான சந்தை வாய்ப்பும் இப்பகுதியில் கணிசமாக உள்ளது. உள்ளூர் சந்தைகள் மட்டுமின்றி, நாட்டின் பிற பகுதிகளுக்கும் இங்கிருந்து ஆடுகள் கொண்டு செல்லப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் ஆடு வளர்ப்புக்கு ஏராளமான சாத்தியக்கூறுகள் கொட்டிக் கிடக்கின்றன. மாவட்டத்தில் உள்ள தரிசு நிலங்கள் மற்றும் மேய்ச்சலுக்கு ஏற்ற பகுதிகளை முறையாகப் பயன்படுத்தினால் ஆடு வளர்ப்பை ஒரு பெரிய தொழிலாக மாற்ற முடியும். குறைந்த முதலீடு, விரைவான இனப்பெருக்கத் திறன் மற்றும் சந்தையில் நிலையான தேவை ஆகியவை ஆடு வளர்ப்பை விவசாயிகளுக்கு ஒரு கவர்ச்சிகரமான தேர்வாக ஆக்குகின்றன.



நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவில் உள்ள 20 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஆடு வளர்ப்பு ஒரு முக்கிய வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. இருப்பினும், இப்பகுதியில் ஆடு வளர்ப்பு பெரும்பாலும் பாரம்பரிய முறைகளிலேயே மேற்கொள்ளப்படுகிறது. சுற்றுச்சூழல் நடைமுறைகளைப் பொறுத்தவரை, அளவுக்கு அதிகமான மேய்ச்சலால் நிலம் பாதிக்கப்படுவது போன்ற பிரச்சினைகள் சில இடங்களில் காணப்படுகின்றன. கால்நடை விவசாயத்தையும் பிரதேச செயலகத்தின் செயல்பாடுகளையும் ஒருங்கிணைப்பதன் மூலம் இப்பகுதியில் ஆடு வளர்ப்பை மேலும் மேம்படுத்தி வருவதை காணமுடிகின்றது. கால்நடை மருத்துவ முகாம்கள், தீவனப் பயிர்ச் செய்கைக்கான ஊக்குவிப்பு, நவீன ஆடு வளர்ப்பு முறைகள் குறித்த பயிற்சி போன்ற நடவடிக்கைகள் விவசாயிகளுக்குப் பேருதவியாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது.


பருவப் பெயர்ச்சிக் காலங்களில் பெய்யும் கனமழை ஆடு வளர்ப்புக்குப் பல சவால்களை ஏற்படுத்துகிறது. வெள்ளம், ஈரப்பதமான காலநிலையால் பரவும் நோய்கள் மற்றும் தீவனப் பற்றாக்குறை ஆகியவை முக்கியமான பிரச்சினைகள். எனினும், சரியான திட்டமிடல்

மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளின் மூலம் இப்பிரச்சினைகளை ஓரளவுக்குக் குறைக்க முடியும். மேடான பகுதிகளில் ஆடுகளுக்கான பாதுகாப்பான கொட்டகைகள் அமைத்தல், போதுமான தீவனம் மற்றும் நீர் இருப்பு வைத்தல், தடுப்பூசி மற்றும் சுகாதாரமான பராமரிப்பு முறைகளைப் பின்பற்றுதல் ஆகியவை மழைக் காலங்களில் ஆடுகளைப் பாதுகாக்க உதவும். பிரதேச செயலகம் கால்நடை வளர்ப்பு அலுவலகம் என்பன கொட்டகைகள் அமைப்பதற்கான உதவி, தீவனம் சேமிப்பதற்கான கிடங்குகள் மற்றும் கால்நடை மருத்துவ உதவிகளை வழங்குவதன் மூலம் விவசாயிகளுக்கு உதவ முடியும்.

ஆடு வளர்ப்பு நாவிதன்வெளி பிரதேச மக்களின் சீவனோபாயத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற குடும்பங்களுக்கு இது ஒரு நிலையான வருமான ஆதாரமாக விளங்குகிறது. குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய திறன், சந்தை வாய்ப்பு மற்றும் ஒப்பீட்டளவில் குறைந்த பராமரிப்பு செலவு ஆகியவை ஆடு வளர்ப்பை ஒரு இலாபகரமான தொழிலாக மாற்றுகின்றன.

இருப்பினும், தற்போதைய நிலையில் ஆடு வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள் பல நடைமுறைச் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். மேய்ச்சல் நிலங்களின் பற்றாக்குறை மற்றும் தரம் குறைதல், தீவனத்தின் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு, ஆடுகளுக்கு ஏற்படும் நோய்கள் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள், நீர் பற்றாக்குறை, மூலதனப் பற்றாக்குறை, சந்தைப்படுத்தல் பிரச்சினைகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி இல்லாமை ஆகியவை முக்கியமான சவால்களாக உள்ளன.

இந்தச் சவால்களை எதிர்கொண்டு ஆடு வளர்ப்புத் தொழிலை மேம்படுத்த அரசு, பிரதேச செயலகம் மற்றும் கால்நடை அபிவிருத்தித் திணைக்களம் போன்ற அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். விவசாயிகளுக்குத் தேவையான நிதி உதவி, பயிற்சி, உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் இப்பகுதியில் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும். குறிப்பாக, மேய்ச்சல்



நிலங்களை முறையாக நிருவகித்தல், நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நவீன ஆடு வளர்ப்பு முறைகளை ஊக்குவித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

முடிவாக, நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஆடு வளர்ப்புத் தொழில் ஒரு முக்கியமான பொருளாதார நடவடிக்கையாக இனங்கண்டு, அதன் சாத்தியக்கூறுகளை முழுமையாகப் பயன்படுத்தவும், விவசாயிகள் எதிர்கொள்ளும் நடைமுறைச் சிக்கல்களைத் தீர்க்கவும் ஒருங்கிணைந்த மற்றும் நிலையான முயற்சிகள் வழங்கி இப்பகுதி மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது. சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் ஆடு வளர்ப்பு முறைகளை மேம்படுத்துவது எதிர்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் சிறந்த சொத்தாக அமையும்.

**தொகுப்பு :**

**Thevakumar Thurkka (Trainee, BBM Hons in Project Management,University of Jaffna)**
**(Under the guidance of Mrs.T.Kirupairajah, Deputy Director of Planning)**



# தவக்கால பெருவிழாவும் அதன் புனிதமும்


திருமதி.டெ.றொசைறோ
பிரதேச செயலகம், நாவிதன்வெளி

தவக்காலம் என்பது கிறிஸ்த்தவ விசுவாசத்தின் மையப் பொருள்களான இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, என்பனவற்றைத் தியானித்து உயிர்ப்பு பெருவிழாவைக் கொண்டாட செபம், தவம், தானம், தியானம் வழியாக நம்மைத் தயாரிக்கும் காலம் ஆகும். இத் தவக்காலமானது அருளின் காலம் என்றும் மனமாற்றத்தின் காலம் என்றும் அழைக்கப்படுகின்றது. தவக்காலமானது, விபூதிப் புதனுடன் ஆரம்பித்து பெரிய வியாழன் இறுதி இராப்போசனம் மாலைத் திருப்பலிக்கு முன் நிறைவு பெறுகிறது. இக்காலமானது, கத்தோலிக்க திரு அவையின்படி நாற்பது நாட்கள் கொண்டமைகின்றது. அதன் அடிப்படையில் ஆலயம் சென்று திருவழிப்பாட்டில் கலந்து கொண்டு நெற்றியில் சாம்பல் பூசுவதுடன் தொடங்கி நாற்பது நாட்கள் நோன்பு காலமாக கருதப்படுகின்றது. எனினும் இடையில் வருகின்ற ஆறு ஞாயிற்றுக்கிழமைகளும் தவ நாட்களாகக் கருதப்படுவதில்லை. காரணம் ஞாயிற்றுக் கிழமை இயேசு உயிர்பெற்று எழுந்த நாளாக இருப்பதனாலும், ஓய்வு நாளாக இருப்பதனாலும் இதனை நோன்பு நாளாக கடைப்பிடிப்பதில்லை.

பாலை நிலத்தில் இயேசு சாத்தானால் சோதிக்கப்பட்ட நிகழ்வினை இந்த நாற்பது நாட்களும் குறிக்கின்றன. இத் தவக்காலத்திலே செபம், தவம், ஒறுத்தல் எனும் பக்தி முயற்சிகளை மேற்கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். ஒறுத்தல் என்பது மாமிசங்களைத் தவிர்த்துக் கொள்ளல், முறையான மன்னிப்புப் பெறல், இறை வார்த்தையினூடாக ஆன்மீகத்தில் இருத்தல், ஏழை எளியவர்களுக்கு உதவுதல், சாதி மத மொழிகளைக் களைந்து அன்புடன் சேர்ந்திருத்தல், மற்றும் எம் உள்ளத்தாலும் உடலாலும் எமக்கு அதிகம் ஈடுபாடுள்ள பிற விடயங்களை விட்டு விலகி கடவுளுக்கு உகந்த காரியங்களில் நம்மை ஈடுபடுத்திக்கொள்ளல் ஆகும்.

இவ் ஒறுத்தலானது விபூதிப் புதன், பெரிய வெள்ளி ஆகிய நாட்களில் கட்டாயம் ஒரு சந்தி, சுத்த போசனம் கடைப்பிடித்தல் அவசியமாகும். இத்தவக்காலத்திலே நாம் அதிகம் தியானிக்கும் ஒரு பக்தி முயற்சி சிலுவைப்பாதை ஆகும். இச் சிலுவைப்பாதை தியானத்தின் மூலம் இயேசு எமக்காகப் பட்ட பாடுகளை நாம் சிந்தித்து தியானிக்க அழைக்கப்படுகின்றோம். இயேசு சிலுவைப்பாடுகளை ஏற்றது, எம் பாவங்களுக்கு மீட்பை பெற்றுக் கொடுப்பதற்காகவேயாகும். தவக்காலத்தின் உச்சமான பரிசுத்த வாரம் குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பமாகிறது. அன்று யூத மக்கள் இயேசுவை கழுதையில் ஏற்றி கையில் ஓலைகளை ஏந்தி “தாவீதின் மகனுக்கு ஓசன்னா” என்று பாடிக் கொண்டு சென்றார்கள். அதே நிகழ்வு இங்கு நினைவு கூரப்படுகின்றது. பெரிய வியாழன் அன்று இயேசு பாடுகள் பட முந்திய நாள் இரவில் சீடர்களுடன் இறுதி இராப்போசனம் அருந்துகிறார். அன்று தான் திருப்பலி, குருத்துவம், நற்கருணை என்ற மூன்றும் ஏற்படுத்தப்படுகின்றது. அன்றைய நாள் இரவு முழுவதும் இயேசு கெஸ்தமனே பூங்காவில் தாம் அனுபவிக்கப் போகும் துன்பத்தைக் குறித்து இறைவனிடம் வேண்டுகிறார். பெரிய வெள்ளி அன்று இயேசு சிலுவையைச் சுமந்து கொண்டு கல்வாரி மலை நோக்கி சென்றதை நாம் தியானிக்கிறோம். அன்று “தந்தையே உம் கையில் என் ஆவியை ஒப்படைக்கிறேன்” என்று கூறி உயிர் விடுகின்றார். பின் இயேசுவின் உடலை சிலுவையிலிருந்து இறக்கி தாய் மரியாவின் மடியில் வளர்த்தி கல்லறையில் அடக்கம் செய்கின்றார்கள்.

இவ் உலகில் இறந்த யாரும் உயிருடன் எழுந்ததாக நாம் கேள்விப்பட்டதில்லை. ஆனால் எம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து இறந்து மூன்றாம் நாள் உயிருடன் எழுந்தார். இதனை கத்தோலிக்க திரு அவை உயிர்ப்பு பெருவிழா அல்லது பாஸ்கா விழா என்றும் அழைக்கின்றது. அவ்வாறு அழைப்பதற்கான நோக்கம் இயேசு கிறிஸ்து மக்களின் பாவங்களையும், நோய்களையும் சுமந்து கல்வாரி சிலுவையில் மரித்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்த தினத்தை நினைவு கூரும் விதமாக இந்த நாள் கொண்டாடப்படுகின்றது. இதனை கத்தோலிக்க திரு அவையிலுள்ள கிறிஸ்தவர்கள் மிக முக்கியமான நாளாக கொண்டாடுகின்றனர். பாஸ்கா என்ற வார்த்தைக்கு “கடந்து போதல்” என்றும் பொருள்படும். பாஸ்கா விழா என்பது இயேசுவின் சாவையும் உயிர்ப்பையும் முன்னறிவிப்பதாக கருதப்படுகின்றது. இதனை அகில உலக திரு அவையானது ஆண்டவரின் உயிர்ப்பு விழாவாக கொண்டாடுகின்றது.



# ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2025–2029

எமது நாட்டில் காலத்திற்கு காலம் ஆட்சி அமைக்கப்பட்ட அரசாங்கங்கள் இலங்கையில் வறுமையினை ஒழிப்பதற்காகப் பல்வேறு வறுமையொழிப்புப் திட்டங்களை அமுல்படுத்திக் கொண்டு வந்துள்ளன. அதன் அங்கமாக ஜனசவிய, சமுர்த்தி, கிராமிய பொருளாதார அபிவிருத்தி, துரித கிராமிய பொருளாதார அபிவிருத்தி, அஸ்வெசும போன்ற திட்டங்களைக் குறிப்பிடலாம். 2025ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த புதிய அரசானது "வளமான நாடு அழகான வாழ்க்கை" ("A Thriving Nation-A Beautiful Life") என்ற தேசிய கொள்கையின் கீழ் வறுமையினை ஒழிப்பது அல்லது குறைத்துக் கொள்ளும் நோக்கில் அமுல்படுத்தப்படவுள்ள திட்டமே ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் -2025-2029 ஆகும் (IRDP -2025-2029).

கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி பணியகத்தின் கீழ் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இலங்கையின் சனத்தொகையில் 06 பேரில் ஒருவர் வறுமைக்குள்ளாகி இருப்பதாக சனத்தொகைக் கணக்கெடுப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட குடும்ப வருமான மற்றும் செலவினக் கணக்கெடுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றில் 95.3 வீதமான மக்கள் கிராமங்களிலும் பெருந்தோட்டப் பகுதிகளிலும் வாழ்கின்றனர். அதே போல உழைப்புப் படையில் பெண்களினதும் இளைஞர் சமுதாயத்தினதும் பங்கேற்பானது குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், பொருளாதார சமூக செயற்பாடுகளுக்கு சிரேஸ்ட பிரஜைகளின் செயலூக்கமான பங்களிப்பு குறைந்த மட்டத்தில் உள்ளமையும் அடையாளம் காணப்பட்ட அபிவிருத்தி பிரச்சினைகளில் சிலவாகும். அதற்கு மேலதிகமாகக் கிராமப் பகுதிகளில் காணப்படும் சமூகப் பொருளாதார பிரச்சினைகள் அப்பகுதியின் அபிவிருத்தி மற்றும் சமூகக் கட்டமைப்பில் குறிப்பிடத்தக்க எதிர் மறையான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன. ஆதலால் கிராமப்புற மற்றும் பெருந்தோட்டப்புற மக்களிடையே நிலவும் பல பரிமாண வறுமையினை ஒழிப்பதற்கு விரிவான ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமொன்றின் தேவைப்பாடு உருவாகியுள்ளது.

"வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற தேசியக் கொள்கையின் பிரகாரம் எந்தவொரு பகுதியினரையும் கைவிடாமல் கிராமிய மக்களின் அபிவிருத்தி ரீதியான சவால்களினை வெற்றி கொள்வதற்கு அரச நிறுவனங்கள், தனியார் துறை, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகள், சமுதாய அடிப்படை அமைப்புகள் மக்களோடு கூட்டிணைந்து இவ் ஐந்து வருட கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை (2025-2029) செயற்படுத்த இருக்கின்றது.

## கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் மூல தத்துவங்கள்

1. ஒருங்கிணைந்த மற்றும் முழுமையான அணுகுமுறை. சமுதாயக் கட்டுப்பாட்டு அணுகல்.
2. சமத்துவம் மற்றும் சமூக நீதி.
3. நிலைபேறான அபிவிருத்தி.
4. அனைவரினதும் பங்கேற்பு.
5. சமூக ஒத்துழைப்பு.
6. யாரையும் புறக்கணிக்காமல் சம வாய்ப்புகள் வழங்குதல்.

M.I. Aliyar
Development Officer.
Divisional SecretariatNavithanveli

## சிறுகதை

# அவளும் தாய்தான்



அருளானந்தம் சுதர்சன்
வீரமுனை

கருமேகங்கள் சூழ்ந்து ஆதவனை ஆலிங்கனம் செய்கையில் பிரசண்ட மாருதத்துடன் மழை சோவெனப் பொழிந்தது. மதிய உணவை உண்ட களைப்பில் காரியாலயத்தில் சற்று கண்ணயர்ந்த சரவணனின் கையடக்கத் தொலைபேசி ஒலித்ததும், திடீரெனக் கண்விழித்து யாரென அலைபேசியைப் பார்த்தான். அந்தப்பக்கம் தனது மனைவியின் குரல் "என்னங்க இண்டைக்கு உங்கட அக்காட மகள் வயசுக்கு வந்திட்டாளாம், ராவைக்கு தண்ணி வாக்கிறதாம், நான் கொஞ்ச சாமான்களை லிஸ்ட் எழுதி சுந்தரச் சித்தப்பாக்கிட்ட அனுப்பியிருக்கன். நீங்க வரும்போது முருகன் ஸ்ரோர்ல மறக்காம முழுதையும் வாங்கிற்று வாங்க, மழை எண்டு வாங்காம வந்திராதீங்க" எனக் கூறினாள்.

சரி…சரி நான் நேரத்தோடே வாறன், நீ வெளிக்கிடு" என்று கூறிவிட்டு, அந்த பொருள்களின் விபரத்துண்டை சுந்தரத்திடம் இருந்து பெற்றுக்கொண்டு தனது உயர் அதிகாரியிடம் அரை நாள் விடுமுறை சொல்லிவிட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

அவன் புறப்படும்போது மழை சற்று குறைந்து போய் தூறல் மழையாகவிருந்தது. மனைவி கூறிய பொருள்களை பலசரக்குக் கடையிலே வாங்கிக்கொண்டு மோட்டார் சைக்கிளை திருப்பும்போது எதிரே உள்ள சொர்ணம் நகைக் கடை தெரிந்தது. நீண்ட நாட்களாக தனது காற்கொலுசு அறுந்து விட்டதாகக் கூறிய மனைவி தேவகிக்கு அங்கு சென்று ஒரு வெள்ளிக் கொலுசு ஒன்றையும் வாங்கிக்கொண்டு நேரத்தோடு வீடு சென்றான் சரவணன்.

தேவகியை காதலித்துத் திருமணம் செய்து எட்டு வருடங்களாகியும் இவர்களுக்கு குழந்தைகள் இல்லை என்ற ஒரு கவலையைத் தவிர மற்ற எல்லாவற்றிலும் கடவுள் சந்தோசமாகத்தான் வைத்திருக்கின்றான். குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற அங்கலாய்ப்புத்தான் இருவருக்கும் உண்டு.

வாங்கிவந்த பொருள்களை எடுத்துக்கொண்டு தேவகி. "என்னங்க நேரத்தோட மச்சாள்ர வீட்ட போய் உங்கட மருமகளுக்கு செய்ய வேண்டிய தாய்மாமனுக்குரிய கடமையெல்லாம் ஒரு கொறையுமில்லாம செய்திட்டு வரனும், பிறகு அது செய்யல… இது செய்யல… என்டெல்லாம் என்ட தலையில வந்து விடியப்பொடாது" எனக் கூறினாள்.

மாலை நான்கு மணிக்கெல்லாம் தன்னை அலங்கரித்து தயாரான தேவகியைப் பார்த்து "இந்த சிவப்புச் சாறி உனக்கு நல்லா இருக்குது" என்று கூறி, தான் வாங்கி வந்த வெள்ளிக் கொலுசை அவளிடம் நீட்டினான். பூரிப்பால் அவனை கட்டியணைத்து முத்தமிட்டுக் கொண்டே அதனை வாங்கித் தனது கால்களில் அணிந்து "நல்லா இருக்கா எண்டு சொலுங்க" என்றாள். "அதுக்கென்ன உனக்கு சூப்பரா இருக்கு, கலியாணப் பொண் மாதிரியே இருக்காய்" என்று அவன் கூறியதும் அவள் நாணத்தால் வெட்கிச் சிரித்தபடி "போங்க உங்களுக்கு ஒரே பகிடிதான்" எனக் கூறிவிட்டு "கெதியா நீங்க வெளிக்கிடுங்க" என சரவணனைப் பார்த்துக் கூறினாள். "இந்தா சேட்ட போட்டுத்து வேட்டியக் கட்டினா நான் ரெடி" எனக் கூறி எழுந்தான்.

"நம்மட நல்ல நேரம் மழை விட்டிரிக்கிது" எனக் கூறி மோட்டார் சைக்கிளை சரவணன் உறுட்டலானான். "மோட்டச் சக்கிள்ள போக வேணாம், ரெண்டு ஒழுங்கை கழிச்சா உங்கட அக்காட வீடுதானே, வாங்க நடந்தே போவம்" எனக் கூறி தனது கைகளால் மெல்ல சரவணனின் கைகளை பிடித்தாள். இருவரும் கை கோர்த்தபடியே வீதியில் நடந்தனர்.

"என்ன தேவகி கடும் கலக்கலா போற, மச்சாள்ர பிள்ளைக்கு தண்ணீ வாக்கையா போக?' என்று எதிரே வந்த கண்ணகை கேட்டதும் "ஓம் மாமி அதுக்குத்தான் போறம்" என பதில் கூறி இருவரும் நடக்கலானார்கள்.

மாலைப்பொழுதின் தூறல் மழை காரணமாக சரவணனின் அக்காவின் வீட்டின் படலையைப் பிரித்து வீதியின் நிலத்தையும் சேர்த்தவாறு பந்தலிட்டு, அதன் கீழ் கதிரைகள் சில அடுக்கப்பட்டிருந்தன. அக்கம் பக்கத்து பெண்கள் பலர் அதில் அமர்ந்து கொண்டிருந்தனர். உள்ளே வந்த சரவணனைப் பார்த்த அக்கா "என்னடா தாய் மாமன் இப்பானா வர நேரம் கிடச்சிக்கு" எனக் கூறி தனது மகளுக்கான நீராட்டு பொருள்களைத் தயார் பண்ணிக்கொண்டிருந்தாள். தேவகியைக் கண்ட சரவணனின் தாய் "என்னடியம்மா பக்கத்தில இருந்துங்கூட ஊராக்களப்போல சுணங்கித்தான் வாறாய், புள்ளயா குட்டியா இவ்வளவு நேரம்போய் வாறாய்? அது சரி புள்ள குட்டி பெத்திருந்தாத்தானே இதப்பத்தியெல்லாம் தெரிய..." எனக் கூறி முகத்தை சுழித்துக்கொண்டாள். மெல்ல ஒன்றும் பேசாது மௌனமாய் வீட்டினுள்ளே சென்றாள் தேவகி.

பட்டாசு வெடிக்கும் சத்தத்துடன் மங்கையர் குரவை இட மஞ்சள் நீரை அள்ளி சரவணனின் அக்காவின் மகளான சிந்துவின் தலையில் ஊற்றினர். சரவணனின் அம்மா, அக்கா, தங்கை, தம்பியின் மனைவி, சித்தி, மாமி என எல்லோரும் நீராட்டும்போது தானும் அவளுக்கு மஞ்சள் நீராட்ட வாஞ்சையோடு செம்பினை தூக்கினாள் தேவகி, திடீரென அவளது கைகளைப் பிடித்து இழுத்து வந்த அவளது மாமியார் "ஏன்டி ஒனக்கு அறிவிருக்கா.... வாழும் வளரும் புள்ள அவள், அவளுக்கு நீ தண்ணீ ஊத்தப்போறாய். வயித்தில ஒரு புள்ளப்பூச்சியும் இல்ல, உன்ட தோஷம் அவள தொத்தும், நீ பேசாம வந்தமா சாப்பிட்டமா என்று அங்கால போய் இரு" என்று வைதாள். அங்கிருந்தவர்கள் அனைவரின் கண்களும் அவளையே நோக்கின.

தான் ஒரு மலடி என்று சொல்லாமல் சொல்லிவிட்டு செல்லும் மாமியாரை ஆதரித்த மச்சாளின் பார்வையும் அயலிலுள்ளவர்களின் கழிவிரக்க முகங்களும்; தேவகியின் கண்களில் கண்ணீரை வரவழைக்கவே தலையைக் குனிந்து கொண்டு அங்கிருந்து அகன்று ஓரமாய் உள்ள ஒரு கதிரையில் சென்று அமர்ந்தாள். தாய் மாமன் கடமைகளை முடித்துவிட்டு வந்த சரவணன் தேவகியை தேட, அவள் முகம் கலக்கமடைந்திருப்பதை கண்டான். "என்ன...என்னாச்சி"...என அவன் கேட்க "ஒண்டுமில்ல கண்ணில தூசி பட்டுத்து" என்று கூறிவிட்டு "நாம வீட்ட போவமா" எனக் கேட்டாள். "கொஞ்சம் இரு அக்காட்ட சாப்பிட்டுத்து போவமே" என அவன் கூற " இல்ல எனக்கு ஒரே தலையிடியா இருக்கு அதான் கேட்ட" என்று அவள் கூறியதும். "சரி வா போவம்" எனக் கூறி அங்கிருந்து அகன்றான் சரவணன்.

இந்த சம்பவம் தேவகிக்கு ஒன்றும் புதிதல்ல, கடந்தமுறை சரவணனின் தம்பியின் திருமணத்தின்போது மணமகள் அழைப்பிற்காக தாலி மற்றும் கூறைப்புடவைப் பொருள்களை சுமந்து செல்ல தயாராக இருந்த தேவகியைப் பார்த்து "நீ இத தூக்க வேணாம், எதிர்காலத்தில என்ட மத்த புள்ளயும் வாரிசி இல்லாம இருக்கவா இந்த வேலையச் செய்ய வாறாய், புள்ள குட்டி பெக்காதவள் தாலி கூறை தூக்கக்கூடாது" என்று மாமியார் கூறி ஒதுக்கித்தள்ளிய நிகழ்வை ஊரே வேடிக்கை பார்த்த சம்பவம் அவள் மனதை விட்டு இன்றும் அகலவில்லை. அதனால் மனம் நொந்து பல நாட்களாக தேவகி சரவணனின் வீட்டாரின் மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்வதை தவிர்த்து இருந்தாள்.

எத்தனை இடங்களில் இந்த அவமானம், கோயிலுக்கு சென்றால் அங்கும் பலரது பார்வையும் "என்ன வயித்தில ஒண்டும் இல்லையா?" என்ற கேள்விக் கணைகளும் அவளது நெஞ்சில் கூரிய அம்புகளாகப்; பாய்ந்தன. "ஏன் எனக்கு மட்டுமா இந்த நிலை நான் மட்டும் என்ன பாவம் செய்தேன், ஒரு மங்கல நிகழ்வுகளிலும்சரி, களியாட்டங்களிலும்சரி நான் மட்டும் கலந்துகொள்ளும்போது இதையே பலர் சுட்டிக் காட்டுகின்றனரே, அப்படி குழந்தை பெறாதது என் தவறா...? என பலமுறை எண்ணி அவள் கடவுளையும் நொந்துகொண்டதுண்டு.

சில நாட்கள் சென்ற பின் தேவகி உணவு சரியாகச் சாப்பிடுவது இல்லை ஒரே வாந்தியாக வருவதை உணர்ந்த



சரவணன் அயல் வீட்டு மருத்துவிச்சியை கூட்டி வந்து என்ன என்று பார்த்ததும், அவள் கர்ப்பமாக இருக்கிறாள் என்ற செய்தியை அறிந்தான். அச் செய்தியை கேட்டதும் தாங்க முடியாத மகிழ்ச்சியால் தலை கால் புரியாது திளைத்தான்.

தேவகியோ நேர்த்தியின் பொருட்டு தொட்டில் மற்றும் கண் மாணிக்கங்களைச் செய்து மீனாட்சியம்மன் ஆலயத்தில் கொண்டு கட்டியதுடன் பொங்கலும் படைத்தாள். இப்போதெல்லாம் தேவகியின் மாமியார் தேவகியின் வீட்டில்தான் இருப்பார். எந்த வேலையையும் தேவகியைச் செய்ய விடாது சரவணன் அனைத்து வேலைகளையும் புரிந்தான். தேவகியின் அம்மாவும் அதற்கு துணையிருந்தாள். எட்டு வருடங்களுக்குப் பிறகு தங்களுக்குக் கிடைத்த மலடி என்ற அவப் பெயரிலிருந்து நீங்க அந்தக் குழந்தையின் பிறப்புக்காக அவர்கள் ஆவலாகக் காத்திருந்தனர்.

மாதங்கள் சில கடந்தன, பலவிதமாக பேசியவர்களெல்லாம் இப்போ அவளை பார்க்கவென்றே பயற்றம் பலகாரம், கொழுக்கட்டை எனக் கொண்டுவந்து நலன்விசாரித்து செல்வதனைப் பார்க்கும் போதெல்லாம் தேவகியின் மனதில் சொல்ல முடியாத ஆனந்தம். தேவகியின் மாமியாரும், மச்சாளும் பிறக்கும் பிள்ளை ஆணா பெண்ணா என்ற எதிர்பார்ப்பில் என்ன பெயர் வைக்கலாம் என்றெல்லாம் கதைப்பதைப் பார்த்த சரவணனுக்கு மனதிற்குள் ஒருவகை ஆனந்தம். இடது கையை ஊன்றி எழும்புவதால் அது பெண்ணாகத்தான் இருக்கும் என தேவகியின் மாமியார் கூற, இல்லை வலது கையைத்தான் அதிகமாக ஊன்றி எழும்புகிறாள். வயிறும் சிறிதாக இருக்கிறது. ஆகவே பிறப்பது ஆண் பிள்ளைதான் என்று மச்சாள் கூறுவதையும் காதுகொடுத்து கேட்கும் தேவகியின் மனதிலும் ஒருவகைப் பூரிப்பு.

ஆங்கில மருத்துவம் வளராததும், வீட்டிலேயே சுகப் பிரசவம் பார்க்க மருத்துவிச்சிகள் செயற்படும் காலத்தில் சரவணன் தனது வீட்டுக்கு அருகிலுள்ள மருத்துவிச்சியை எந்நேரமும் தனது மனைவியைப் பார்ப்பதற்கென்றே நியமித்திருந்தான். அதற்கான ஊதியத்தையும் கொடுத்து வந்தான்.

சித்திரை பிறந்தது, மாதங்கள் ஒன்பது ஆயின, தேவகிக்கு வயிற்று வலி ஏற்பட்டது. வீட்டுக்குள்ளேயே பிரசவம் பார்க்க மருத்துவிச்சி அழைக்கப்பட்டாள், சரவணனின் தாயும் தமக்கையும், தேவகியின் தாயும் உள்ளே இருக்கின்றனர். வலியால் துடித்து அழும் கதறல் கேட்டு கலக்கத்துடனும் எதிர்பார்ப்புடனும் வெளியில் உள்ள திண்ணையில் சரவணன் அமர்ந்து இருக்கிறான். அருகில் அவனது தம்பி சாரங்கனும் அமர்ந்திருக்கிறான்.

“சித்திரை மாதம் புத்திரன் பொறந்தால் குடும்பத்துக்காகாது. பிறப்பது பெண் பிள்ளையாக இருந்திடனும் கடவுளே” என தேவகியின் தாய் வேண்டுகிறாள், பிறப்பது எந்த குழந்தையாயினும் நல்ல படியா பிறந்திடனும் என சரவணன் தெய்வத்திடம் வேண்டுதல்களுடன் “குட்டி போட்ட பூனை போல” அங்குமிங்கும் நடந்து திரிந்தான். பல பிரயத்தனங்களுக்குப் பிறகு எதையோ சாதித்த நிலையில் மருத்துவிச்சி வெளிவருகிறாள்.

ஓடிச் சென்ற சரவணன் அவளிடம் “என்ன பிள்ளை எனக்குப் பிறந்திருக்கு...?” என்ற எதிர்பார்ப்புடன் கேட்டான். மருத்துவிச்சி எதுவும் பேசாதிருந்தாள். உள்ளே ஓடிச் செல்கிறான். தனது தாயின் கையில் வெள்ளை துணியில் சுருட்டப்பட்டு இருக்கிறது அழகிய மழலை. அதைக் கண்ட ஆனந்தத்தில் ஓடிப்போய் தேவகியைப் பார்க்கிறான். அவள் கண்களில் கண்ணீர் ஆறுகளாகப் பாய்தன. தனது அம்மாவைப் பார்க்கிறான் “என்ன... என்னம்மா... நடந்த சொல்லுங்களன்” என்று கத்தினான். “மனே உன்ட மனிசிக்கு புள்ள பாக்கியம் இல்லடா, இஞ்ச பாரு குழந்தையும் செத்தே பொறந்திருக்கு, இனியும் அவள் தாயாகும் பாக்கியம் இல்லடா மகனே...” என்று ஓவென்று அழுதாள்.

கண்களில் கண்ணீர் மல்க கைகளில் குழந்தையை எடுத்து கட்டியணைத்தான். உயிர் மூச்சு இல்லை, ஆண் குழந்தை, அழகு வதனம், இரத்தச் சிவப்பு உதடு, பிஞ்சுக் கால்கள் ஆனால் அசைவு எதுவும் இல்லை. குழந்தையை கட்டியணைத்தபடி ஓ..வென்று அழுது புலம்பினான்.

தேவகியின் மனதில் சொல்ல முடியாத துயரம், அழுது அழுது இனியும் அவள் அழுவதற்கு கண்ணீர் இல்லை என்றாயிற்று. வீட்டிலுள்ளவர்களின் வார்த்தைகளும் அவள் நெஞ்சில் நெருப்பை அள்ளிக்கொட்டியதுபோல இருந்தது. “இந்த கடவுளுக்கும் கண் இல்லாமல் போய் விட்டதே” என்று மனதிற்குள் எண்ணியபடி சாளரத்தைத் திறந்து தன் தலையை சாய்த்து அழுதாள். பிரசவ வேதனையை விட அவள் இனி தாயாகும் பாக்கியமும் இல்லை, அம்மா என்ற சொல்லை இனிக் காதால் கேட்கப்போவதுமில்லை என்ற நினைவுகளும், அசைவற்ற குழந்தையின் மரணமும் அவளை மிகவும் வேதனைக்குள்ளாக்கி துடிக்க வைத்தது.

திடீரென வெளியிலிருந்து மழலையின் அழுகுரல் அவள் மனதில் ஆனந்தம் பொங்கியது. வாழ்நாளில் அத்தனை கவலைகளையும் ஒரே நொடியில் அள்ளி வீசினாற்போல் இருந்தது அந்தக் குரல், மீண்டும் ஒலிக்கிறது அந்த மழலையின் அழுகுரல்.






தன்னை மலடி என்றே அழைத்தவர்கள் மத்தியில் “அம்மா” என்று அழைக்க வந்த அந்தக் குரலை நோக்கி வெளியில் ஓடிவருகிறாள் தேவகி.

“அம்மா...அம்மா... ஏதாச்சும் பிச்சை போடுங்கள்” என்று கைகளில் அழுகின்ற ஒரு மழலையை ஏந்திய யாசகியின் குரல்தான் அது.

காற்படி அரிசியுடனும், தனது குழந்தைக்கு வைத்திருந்த அத்தனை பொருட்களும் அடங்கிய கூடையை கைகளில் ஏந்தி வந்து அவற்றை அந்த யாசகிக்குக் கொடுத்து. “இந்தா இந்த பொருள்களை வச்சி குழந்தையை நல்லா பார்த்துக்கோ” எனக் கூறி தனது விரல்களால் அந்த மழலையின் பிஞ்சு விரல்களைத் தடவினாள். “அம்மா நீங்க பதினாறும் பெத்து பல்லாண்டு வாழவேண்டும்” என்று கூறி நடந்தாள் யாசகி.

கண்களில் கண்ணீருடன் கனத்த மனதுடன் பிரசவ வேதனையுடனும் இறந்த குழந்தையைக் கட்டி அணைத்துக்கொண்டு வாசற்படியில் சாய்ந்து கிடந்தாள். அழுதழுது கண்ணீரும் வற்றி விட்டது. அவளுக்காக வானம் முழக்கமிட்டு சத்தத்துடன் அழுது கண்ணீராக மழைத்துளிகளை வீழ்த்துகிறது.

பிள்ளை சுமந்தவள், மகப்பேறு கண்டவள், அம்மா என்று அழைக்கப்பட்டவள், ஆம் அவளும் தாய்தான்.

முதலாம் பக்கத்தொடர்

# கையளிக்கப்பட்ட சேவைப்பிரிவு

புதுப்பிக்கப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவிற்கான கட்டடத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கும் நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 பங்குனி 27 ஆம் திகதியன்று இடம்பெற்றது.







இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட செயலாளர் திரு. சிந்தக்க அபேவிக்ரம அவர்கள் பிரதம அதிதியாகவும் மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் திரு. ஏ. எல். மஹ்ரூப் அவர்கள் சிறப்பு அதிதியாகவும் கலந்து கொண்டதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், கணக்காளர் திரு. க. றிஸ்வி யஹ்சர், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. தி. கிருபைராஜா, நிருவாக உத்தியோகத்தர் திரு. ஓ. கே. கீர்த்தி குசுமிந்த, சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் ஆகியோரும் சமூக சேவை உத்தியோகத்தர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சிறுவர், மகளிர் அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக அலுவலக, வெளிக்கள உத்தியோகத்தர்கள் போன்ற பலரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் அதிதிகள் பூமாலை அணிவித்து வரவேற்கப்பட்டதுடன் அம்பாறை மாவட்ட செயலாளர் மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் அவர்களால் திரைநீக்கம் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாக மகளிர் அபிவிருத்தி மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவிற்கான கட்டடம் திறந்து வைக்கபட்டது. மேலும் அதிதிகள் பொன்னாடை அணிவித்து நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் அதிதிகளின் சிறப்பு உரைகளும் இடம்பெற்றது.



முதலாம் பக்கத்தொடர்

# சித்திரை விற்பனைக்கூடம்



2025ஆம் ஆண்டுக்கான சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கூடமானது தமிழ் சித்திரை வருடப்பிறப்பினை முன்னிட்டு சிறப்பாக நடைபெற்றது.

தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் கைத்தொழில் பிரிவு, மற்றும் சமுர்த்தி திணைக்களம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கூடமானது 2025 சித்திரை 10ஆம் திகதி நாவிதன்வெளி பிரதேச செயலக முன்றலில் நடைபெற்றது. நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி . ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.திலகராணி கிருபைராஜா, சமுர்த்தி தலைமையக முகாமையாளர், சமுர்த்தி முகாமையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரிவில் உள்ள திணைக்கள உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது பிரதேச பிரிவிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டதுடன், தொழில் முயற்சியாளர்களும் பயன் பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.












முதலாம் பக்கத்தொடர்

# உபகரணங்கள் வழங்கி வைப்பு

மாகாண சமூக சேவை திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படும் **PSDG** வேலைத்திட்டத்தின் ஊடாக நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சது/ றாணமடு இந்து மகா வித்தியால விசேட கல்வி அலகில் கல்வி கற்கும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட விசேட தேவையுடைய பயனாளிகளுக்கான நீர் மெத்தை (Water Mattress) போன்றவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 ஏப்ரல் 01ஆம் திகதியன்று இடம்பெற்றது.

இந்நிகழ்வில் நாவிதன்வெளி உதவிப் பிரதேச செயலாளர் திரு. பே. பிரணவரூபன், சமூக சேவை உத்தியோகத்தர் திரு. கு. குணரெட்ணம் ஆகியோரும் சமூக சேவை பிரிவு உத்தியோகத்தர்கள் போன்றோரும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கான பொருள்களை வழங்கி வைத்தனர். அடிப்படைத் தேவை கருதி வழங்கி வைக்கப்பட்ட பொருள்களினால் பாதிக்கப்பட்டவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.













# காலாண்டுக்கான கலந்துரையாடல்

முதலாம் பக்கத்தொடர்

2025 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டிற்கான பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள் மற்றும் உளச் சமூக ஒன்றிய கூட்டமானது நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி. ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் 2025 மார்ச் 26 ஆம் திகதி பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் நாவிதன்வெளி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திரு. செ. சிவம் அவர்களும், நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அரச நிறுவனங்களான பிரதேச சபை, சுகாதார வைத்திய பணிமனை போன்றவற்றின் பிரதிநிதிகளும் கல்முனை ஆதார வைத்தியசாலை உளநல பிரிவு மற்றும் சிறுவர் நன்னடத்தை பிரிவு உத்தியோகத்தர்கள் ஆகியோரும் அரச சார்பற்ற நிறுவனங்களான SWOAD, முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி முன்னணி போன்றவற்றின் உத்தியோகத்தர்களும் நாவிதன்வெளி பிரதேச செயலக சிறுவர் மகளிர் பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவு, கலாசாரப் பிரிவு, சமுர்த்தி பிரிவு ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் போன்றோரும் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் அது தொடர்பிலான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன. இந்நிகழ்விற்காக நிதி அனுசரணையை நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம் வழங்கியிருந்தது.


















# தமிழ் சிங்கள புது வருட மற்றும் ஈஸ்டர் தின கலாசார விளையாட்டு விழா

தமிழ் சிங்கள புது வருட மற்றும் ஈஸ்டர் நிகழ்வுகளை முன்னிட்டு நாவிதன்வெளிப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு பாரம்பரிய விளையாட்டு விழா 2025.04.23 அன்று பிற்பகல் 2 மணியளவில் நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வானது நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திரு. P. பிரணவரூபன் மற்றும் பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. T. கிருபைராஜா ஆகியோரின் நெறிப்படுத்தலில் இடம்பெற்றதுடன் விளையாட்டு நிகழ்வுகளை நாவிதன்வெளி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தர் திரு. V.வசந் மற்றும் இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் திரு. பிரபாகரன் ஆகியோர் ஒருங்கிணைப்புச் செய்தனர்.

மேலும் இந்நிகழ்வில் நாவிதன்வெளி சமுர்த்தி தலைமையாக முகாமையாளர் திரு. S. சிவம், நிருவாக உத்தியோகத்தர் O.G.K குசுமிந்த, நிருவாக கிராம உத்தியோகத்தர் திரு. மனோஜ் இந்திரஜித் ஆகியோருடன் துறைசார் வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிளைப்பிரிவுகளின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் சேவை உத்தியோகத்தர்கள், ஏனைய வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகிய சகலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது பாரம்பரிய விளையாட்டுக்களான பெண்களுக்கான சமநிலை ஓட்டம், கிடுகு பின்னுதல், முட்டி உடைத்தல், கயிறு இழுத்தல், தண்ணீர் நிரப்பிய பலூனை பிடித்தல், பனிஸ் சாப்பிடுதல், சாக்கோட்டம், மர்ம மனிதன், பலூன் நடனம், சங்கீதக் கதிரை, மோட்டார் சைக்கிள் மெல்லோட்டம், ஊசி நூல் கோர்த்தல், சூப்பியில் சோடா குடித்தல், மிட்டாய் ஓட்டம், பிஸ்கட் சாப்பிடுதல், யானைக்கு கண் வைத்தல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

இந்நிகழ்வின் போது 2025ஆம் ஆண்டு கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டு நடாத்தப்பட்ட நாவிதன்வெளி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையிலான போட்டி நிகழ்ச்சியில் பங்குபற்றி வெற்றியீட்டிய கழகங்களுக்கான வெற்றிக்கிண்ணங்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இந்நிகழ்வின் போது அலுவலக உத்தியோகத்தர்கள் மிகவும் மகிழ்ச்சியாக பங்குபற்றி வெற்றிகளையும் பெற்றுக்

கொண்டனர். அத்துடன் தமிழ் சிங்கள பாரம்பரிய உணவுகள் செயலக உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டதுடன் அதனை உத்தியோகத்தர்களே தயாரித்தமை சிறப்பம்சமாகும். அதேவேளை இந்நிகழ்விற்கான அனைத்து நிதிப் பங்களிப்புகளையும் உத்தியோத்தர்களே வழங்கி சிறப்பித்தமை விசேட அம்சமாகும். இவ் விளையாட்டு விழா இவ் வருடமே ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இதன் மூலம் உத்தியோகத்தர்கள் தங்களது மன இறுக்கத்திலிருந்து விடுபட்டு அவர்களது பள்ளிக்கால நினைவுகளை மீட்டெடுக்கக்கூடிய வகையில் இருந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே இந்நிகழ்வில் நிதிப் பங்களிப்பு மற்றும் சரீர உதவிகள் போன்றவற்றை சிறப்புற வழங்கிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் ஏற்பாட்டுக் குழுவினர் நன்றியினை தெரிவித்ததுடன் இத்தகைய நிகழ்வுகள் மூலம் உத்தியோகத்தர்கள் இடையே நல்லுறவு கட்டியெழுப்பப்பட வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது என கலந்துரையாடி மகிழ்ந்தமை குறிப்பிடத்தக்கது.






























# Ghibli Anime: ட்ரெண்டாகும் கிப்லி; ஆஸ்கர் இயக்குநரின் கைவண்ணம்; AI-ல் எளிதாக உருவாக்குவது எப்படி?

நீங்கள் சமூக வலைத்தளங்களை பயன்படுத்துபவராக இருந்தால் நிச்சயம் இந்த கிப்லி ஆர்ட் போட்டோக்களைப் பார்க்காமலிருந்திருக்க மாட்டீர்கள். திடீர் திடீர் என ஏதோவொன்று தினமும் வைரலாகிக் கொண்டிருக்கும் இந்த சோஷியல் மீடியா யுகத்தில், இப்போதைய வைரல் இந்த கிப்லி ஆர்ட்தான்.

செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் நாளுக்கு நாள் ஆச்சரியமூட்டும் இற்றைப்படுத்தல்கள் வந்த வண்ணமிருக்கின்றன. இப்போது சாதாரண டிஜிட்டல் போட்டோவை நொடிப்பொழுதில் கிப்லி ஆர்ட் எனும் **Animation** புகைப்படமாக மாற்றிக் கொடுக்கும் **Update** வந்துள்ளது.

## கிப்லி ஆர்ட்டின் சுவாரஸ்யப் பின்னணி

இந்த ‘கிப்லி ஆர்ட் (Ghibli Art)’ என்ற சொல் அரபிக் மொழியிலிருந்து வந்தது என்று கூறப்படுகிறது. அரபிக் மொழியில் இதை ‘கிப்லி’ என்று உச்சரிக்கிறார்கள். இதற்கு சஹாரா பாலைவனக் காற்று என்று அர்த்தம். **‘Caproni Ca.309 Ghibli’** என விமானத்திற்கும் இந்தப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.


ஜப்பானில்தான் இந்த கிப்லி ஆர்ட் பிரபலமானது. அங்கு இதை ‘ஜிப்லி ஆர்ட்’ என்று சொல்கிறார்கள். இப்படி, எப்படி வேண்டுமானாலும் உச்சரித்துக் கொள்ளலாம். சரி, இந்த கிப்லி ஆர்ட் எப்படி உருவானது என்பது பற்றிப் பார்க்கலாம்.

ஹயாயோ மியாசாக்கி **(Hayao Miyazaki)** என்ற பிரபல ஜப்பானிய இயக்குநர்தான் இந்த கிப்லி ஆர்ட்டின் முலகர்த்தா. இவரின் தந்தை மியாசாக்கி என்ற பெயரில் விமானங்களைச் சொந்தமாக வைத்திருந்தவர்.

இரண்டாம் உலகப்போரில் ஜெட் விமானங்களுக்கு **Steering Wheel** தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளார். அப்போது இரண்டு வயதாக இருக்கும்போதே ஹயாயோ மியாசாக்கி பறக்கும் விமானங்கள் மேலும், பரந்த ஆகாயத்தின் மேலும் காதல் கொண்டார்.

சிறுவயதில் தான் விமானம் ஓட்டுவதுபோலவும்,

ஆகாயத்தில் பறப்பது போன்றும் கற்பனை கண்டு, அதை ஓவியமாக வரைந்துள்ளார்.



அதிலிருந்து வந்த ஆர்வத்தில்தான் அவர் ஜூன் 15, 1985ஆம் ஆண்டு நண்பர்களுடன் இணைந்து ‘Studio Ghibli’ என்ற அனிமேஷன் நிறுவனத்தை ஜப்பானில் தொடங்கி கிப்லி ஆர்ட்டை உருவாக்கி, அதைத் திரைப்படமாக எடுத்தார்.


ஹயாயோ மியாசாக்கி தன் கனவுகளுக்கும், எல்லையில்லா கற்பனைகளுக்கும் கலை வடிவம் கொடுத்து, கிப்லி ஆர்ட் அனிமேஷனாக மொழிபெயர்த்துப் பல திரைப்படங்களை இயக்கினார்.

‘My Neighbor Totoro’, ‘Princess Mononoke’, ‘Howl’s Moving Castle’ எனப் பல திரைப்படங்கள் பார்வையாளர்களை வியக்க வைத்த திரைப்படங்களாகும். 2003ஆம் ஆண்டு ஹயாயோ மியாசாக்கி எடுத்த திரைப்படமான ‘Spirited Away’ சிறந்த அனிமேஷன் திரைப்படத்திற்கான ஆஸ்கர் விருதையும் வென்றது. இப்போது அவருக்கு 84 வயதாகிறது, சமீபத்தில்கூட ‘The Boy and the Heron (2023)’ என்ற கிப்லி ஆர்ட் ஸ்டைல் அனிமேஷன் திரைப்படத்தை எடுத்திருந்தார்.

கற்பனைகளுக்கு வடிவம் கொடுத்து, மெல்லிய வண்ணங்களில், உலகையே எல்லையில்லா கற்பனையில் அனிமேஷனாகக் காண வைக்கும் அந்த கிப்லி ஆர்ட் எவரையும் கவர்ந்து ஈர்த்துவிடும்.

இப்போது ஒரே கிளிக்கில் சாதாரண டிஜிட்டல் போட்டோவை நொடிப் பொழுதில் கிப்லி ஆர்ட் வடிவில் மாற்றிவிடுகிறது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம். ஹயாயோ மியாசாக்கி 1980ஆம் ஆண்டு கால கட்டங்களில் கார்ட்டூன் கதாபாத்திரங்களையும், அதன் ஒவ்வொரு அசைவையும் வரைந்து, அதைச் சுற்றியுள்ளவற்றின் ஒவ்வொரு அசைவையும் வரைந்து தனது கற்பனைகளுக்குப் பல ஆயிரம் அசைவு கொடுத்து, ஒரு காட்சியை உருவாக்கினார்.

அப்படி ஆயிரம் ஆயிரம் அசைவுகளை உருவாக்கி, அதை முழுத் திரைப்படமாக உருவாக்கினார். அவரின் எல்லையில்லா, வற்றாத கற்பனைகள்தான் திரைப்படங்களாக உருவாகின. பல ஆயிரம் கற்பனைகளைக் கொட்டி ஒரு காட்சியை உருவாக்கியிருப்பார்.



"மனிதனின் இந்த எல்லையற்ற, வற்றாத கற்பனை வளத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அழிப்பதுதான் இந்த செயற்கை நுண்ணறிவு. அதை மனிதன் என்றும் இழந்துவிடக்கூடாது" என்று சமீபத்திய நேர்காணலில் ஹயாயோ மியாசாக்கி கூறியிருந்தார்.

Open AI நிறுவனத்தின் Chat GPT-யில் டிஜிட்டல் புகைப்படத்தைப் பகிர்ந்து, ‘Generate this image in the style of Studio Ghibli’ என டைப் செய்தால்போதும், எந்தவொரு டிஜிட்டல் போட்டோவையும் அழகாக ஜப்பான் ஸ்டைல் கிப்லி ஆர்ட் அனிமேஷனாக வரைந்து தந்துவிடுகிறது. உங்கள் இலத்திரனியல் சாதனங்களில் இருக்கும் தனிப்பட்ட தகவல்களின் பாதுகாப்பை உணர்ந்து இந்த செயலிகளை பயன்படுத்துங்கள்.



# இனநல்லுறவோடு இடம்பெற்ற இப்தார் விசேட நிகழ்வு




















நாவிதன்வெளி பிரதேச செயலகம் ஏற்பாடு செய்து நடாத்திய வருடாந்த இப்தார் விசேட நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் தலைமையில் நாவிதன்வெளி பிரதேச சபை சுபமங்களா கலாசார மண்டபத்தில் மார்ச் 27ஆம் திகதி நடைபெற்றது.

பிரதேச செயலகத்தின் கணக்காளர் கே.றிஸ்வி யஹ்ஸர் அவர்களின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த விசேட இப்தார் நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சிந்தக அபேவிக்ரம அவர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தமிழ் - முஸ்லிம் உத்தியோகத்தர்களின் இன நல்லுறவோடு இடம்பெற்ற இந்த இப்தார் நிகழ்வின் மார்க்க சொற்பொழிவை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் அஷ்செய்க் ஏ.எல்.எம்.றிப்கான் (நளீமி) நிகழ்த்தினார்.

இதில் அம்பாறை மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் ஏ. எல். மஹ்ரூப், நாவிதன்வெளி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவரூபன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. திலகராணி கிருபைராசா, நாவிதன்வெளி பிரதேச சபை செயலாளர் பாக்கியநாதன் சதீஸ்கரன் உட்பட நாவிதன்வெளி பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

# குறுக்கெழுத்துப் போட்டி இல.14 இற்கான விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | ப் | 2 ப | ந் | 3 த | 4 ம் | ■ | ■ |
| வ் | ■ | ரு | ■ | 5 ரு | வ | 6 உ | 7 ம் |
| 8 வா | 9 சி | ப் | பு | ■ | 10 ச | தி | மா |
| 11 மை | ல | பு | ■ | 12 வி | ம் | ர | ய |
| ■ | ம் | ■ | 13 ஆ | டி | ■ | ம் | ■ |
| 14 வி | பு | ■ | 15 டு | ட் | 16 பி | ■ | 17 பூ |
| ரு | ■ | 18 லை | ■ | 19 ல் | கு | 20 க | ங் |
| 21 து | ம் | ம | ல் | ■ | 22 ல் | டி | கு |

## வெற்றியாளர்கள்

**1st**
அ.சுதர்சன்
வீரமுனை

**2nd**
டி.ஜாசுகி
பாண்டிருப்பு

**3rd**
திருமதி. R. பிரியதர்ஷன்
பாண்டிருப்பு-01

RELOAD

1st 200/=
2nd 150/=
3rd 100/=

# குறுக்கெழுத்துப் போட்டி இல – 15

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | | | 4 | ■ |
| 5 | | | ■ | ■ | ■ | 6 | 7 |
| 8 | | ■ | 9 | 10 | 11 | | |
| 12 | | 13 | ■ | 14 | | ■ | |
| | ■ | 15 | | | | 16 | ■ |
| ■ | 17 | | ■ | 18 | | | |
| 19 | | ■ | 20 | | | | ■ |
| 21 | | | | ■ | ■ | 22 | |

## இடமிருந்து வலம்

01. அண்மையில் உலகை உலுக்கிய சம்பவங்களில் ஒன்று.
05. சிறந்த பெறுபேறு என்றும் சொல்லலாம் (குழம்பி).
06. தற்போது இதனை அமைக்கத்தான் ஆர்வமாக செயற்படுகின்றார்கள்.
08. இது 30 என்பர் இந்துக்கள்.
09. விரைவில் விடயங்களைப் புரிந்து கொள்பவர்களை இதற்கு ஒப்பிடுவர்.
12. ஆற்றல் என்றும் சொல்லலாம் (குழம்பி).
14. உலகத்தைக் குறிக்கும்.
15. அமைதியான குணம் (குழம்பி).
17. பருத்தி, பட்டு போன்ற நூல்களிலிருந்து தறிக்கப்படுவது (திரும்பி).
18. பனையோலையில் செய்யப்படும் ஒரு பொருள், தற்போது பாவனையும் குறைந்துவிட்டது (குழம்பி).
19. பொழுதுகளில் ஒன்று (திரும்பி).
20. ராசிகளில் ஒன்று (குழம்பி).
21. காற்றின் ஒருவகை (குழம்பி).
22. அழகானவளை இப்படி அழைப்பர்.

## மேலிருந்து கீழ்

01. அழியாதது என்று பொருள்.
02. உடைவினை இப்படியும் கூறுவர் (குழம்பி).
03. இதற்கு கடல்தான் பிடித்தது.
04. சோடனைக்கான ஒரு பொருள் (குழம்பி).
07. இந்தியாவிலுள்ள நகரங்களில் ஒன்று (தலைகீழ்).
10. கோயில் திருவிழாவில் இந்தப் பவனியும் உண்டு (குழம்பி).
11. தொன்று தொட்டு வருவதை இப்படிச் சொல்வர்.
13. வயலுக்கு இப்படியொரு பெயர்.
16. கடலுக்கு இன்னுமொரு பெயர் (குழம்பி).
17. அணிகலன் ஒன்று (குழம்பி).
19. வரவேற்பு நிகழ்வில் இதற்கும் ஒரு இடமுண்டு (தலைகீழ்).
20. முகத்தில் ஏற்படும் ஒரு மாற்றம் என்றும் சொல்லலாம்.

**இதில் காணப்படும் குறுக்கெழுத்துப் போட்டிக்கான உருவமைப்பின் கட்டங்களை வெற்றுத்தாளில் தயாரித்து சரியான விடைகளைப் பூர்த்தி செய்து அதனை புகைப்படம் எடுத்து 2025.05.15ஆம் திகதி பி.ப. 04.15 மணிக்கு முன் 0755424333 எனும் வட்சப் இலக்கத்துக்கு அனுப்பவும். அத்துடன் தங்களது பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் (மீள்நிரப்ப வேண்டிய தொலைபேசி இலக்கம்) என்பவற்றையும் அனுப்பவும்.**



கடந்த மாத இதழின் தொடர்ச்சி...

## 5.2 உறுதிப் பத்திரங்களில் மற்றும் அனுமதிப் பத்திரங்களில் தவறுகளைத் திருத்திக் கொள்வது எவ்வாறு?

காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அனுமதிப் பத்திரம் *LDO* உங்களுடைய அனுமதிப் பத்திரத்தை வாசித்து பார்க்கும் போது, கீழ் காணப்படும் குறைபாடுகள் காணப்படுமாயின் அவற்றைத் திருத்த வேண்டும்.

1. பெயர் பிழையாகக் குறிக்கப்பட்டிருத்தல்.
2. காணி இலக்கம் பிழையாகக் குறிக்கப்பட்டிருத்தல்.
3. எல்லை பிழையாகக் குறிக்கப்பட்டிருத்தல்.
4. காணியின் அளவு பிழையாகக் குறிக்கப்ப்பட்டிருத்தல்.

இது தொடர்பில் குடியேற்ற உத்தியோகத்தர் அல்லது கிராம உத்தியோகத்தர் அறிக்கையுடன் பிரதேச செயலாளரினை சந்தித்து, அவரிடம் விளக்கம் அளிக்க வேண்டும். மேலே குறிப்பிட்ட குறைபாடுகளைப் பிரதேச செயலாளரால் திருத்த முடியும்.

## 6. காணி உரிமை மாற்றல் (விற்றல்), அடகு வைத்தல்

தனியார்/கையுதிர்த்தல் காணி உரிமையாளரின் விருப்பம் மற்றும் கோரிக்கையின் அடிப்படையில் நொத்தாரிஸ் ஒருவரால் இதனை முன்னெடுக்க முடியும். காணி உரிமை மாற்றலை குறித்த மாகாண உள்ளூராட்சி நிறுவனம் அனுமதித்துள்ள ஆகக் குறைந்த எல்லைக்குள் மாத்திரமே முன்னெடுக்க முடியும். (சில சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு பத்திரம், அனுமதி பத்திரம் என்பவற்றுக்குப் பதிலாக, சிலர் பிழையான விதத்தில் நொத்தாரிஸ் உறுதிப் பத்திரம் தயாரிக்கின்றனர். பெரும்பாலானோர் இவற்றை தம்வசம் எடுத்துக் கொண்டு பல்வேறு அரச காரியங்களை நிறைவேற்ற வருவார்கள். அவ்வாறு வருபவர்களின் தேவையை அரச அதிகாரிகளால் நிறைவேற்ற முடியாது. அதனால், தாம் பெறும் அனுமதிப் பத்திரம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்).

அவ்வாறு அரசாங்கத்தின் காணிக்காக வழங்கப்படும் கொடுப்பனவு பத்திரம் / நீண்ட கால குத்தகை பத்திரம் வழங்கும் போது விசேட நடவடிக்கையைப் பின்பற்ற வேண்டும்.

## 6.1 கொடுப்பனவு பத்திரம் (உறுதிப் பத்திரம்) வழங்கல் (காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கல்)

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் இந்த கொடுப்பனவுப் பத்திரம் வழங்கப்படும். அந்த முழுக் காணியையும் அல்லது பகுதியை வேறொருவரின் பெயருக்கு மாற்றுதல் கீழ்வரும் வகையில் முன்னெடுக்கப்படலாம்.



காணியொன்றைப் பகுதிகளாக பிரித்து வழங்கும் எண்ணம் இருப்பின், இடத்தின் ஆகக் குறைந்த அரைப்பகுதி என்பதன் அடிப்படையை கவனத்திற் கொண்டு, அதற்கு ஏற்றாற் போல் பெயரளித்தலை பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்க வேண்டும். அதன் பொருட்டு கிராம சேவகர் அறிக்கை/ குடியேற்ற உத்தியோகத்தர் அறிக்கை தேவைப்படும். அனுமதிப் பத்திரங்களில் அல்லது கொடுப்பனவு பத்திரங்களில் குறித்த காணிகள் பிரிக்கப்படக் கூடிய ஆகக் குறைந்த அளவு என்ன என்பது குறிப்பிடப்பட்டிருக்கும். முன்னர் அந்த அளவு அரை ஏக்கர் அல்லது கால் ஏக்கர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். இன்றைய காலக்கட்டத்தில் இடப்பற்றாக்குறை காரணமாக 10 பேர்ச்சஸ் வரை பகிர்ந்தளிக்க முடியும் என மேலே குறிப்பிட்ட அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர். நீண்ட கால குத்தகைப் பத்திரமாயின் இரண்டரை பேர்ச்சஸ்கள் வரை பகிர்ந்தளிக்க முடியும்.

கோரிக்கை தொடர்பில் பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர் மற்றும் குடியேற்ற உத்தியோகத்தர் பரிந்துரை குறித்து திருப்தி அடைந்தால், சட்டத்தரணி ஒருவரின் ஊடாகப் பெயர் மாற்றல் உறுதிப் பத்திரத்தின் பிரதியைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு உரிமையாளருக்கு அறிவிப்பார். குறித்த ஆவணத்தைப் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்த பின்னர், அதனை முறையாகத் தயாரித்து சமர்ப்பித்துள்ள (கொடுப்பனவு பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின் மற்றும் நிருணயிக்கப்பட்ட ஆகக்குறைந்த பகுதியை நியாயமாக பிரிக்கப்பட்ட அலகுகளுக்கு பொருந்துமாயின்) ஆவணத்திற்கு அனுமதிப் பத்திரம் ஊடாக குறித்த சட்டத்தரணியின் பெயருக்கு வழங்குவார்.

1. பிரதேச செயலாளரின் அந்த அனுமதி பத்திரத்துடன் நொத்தாரிஸ் உறுதிப் பத்திரத்தின் 3 பிரதிகளை தயாரித்து மாவட்ட காணி பதிவாளருக்கு சமர்ப்பித்து பதிவு செய்து கொள்ள வேண்டும்.

11. பதிவு செய்யப்படும் நொத்தாரிஸ் பத்திரம் வழங்குபவரின், முதல் பிரதி - கொடுப்பனவு பத்திர உரிமையாளர்/ பெயர் மாற்றி பெறுபவரிடமும், இரண்டாவது பிரதி - பிரதேச செயலாளரிடமும், மூன்றாவது பிரதி - காணி பதிவாளர் அலுவலகத்திலும் வைக்கப்பட்டிருக்கும். பின்பொரு காலத்தில் மற்றொரு பிரதி தேவையாக இருக்கும் போது, காணி பதிவாளர் அலுவலகத்தில் உள்ள இந்த மூன்றாவது பிரதி நமக்கு பயனுள்ளதாக இருக்கும். எனினும், அதன் பொருட்டு நொத்தாரிஸ் உறுதிப் பத்திரம் எழுதும் நொத்தாரிஸ்/ சட்டத்தரணியின் பெயர், உறுதிப் பத்திர இலக்கம் மற்றும் பதிவு செய்த தினம் என்பன தேவையாகும். எனவே, அந்த தகவல்களை நினைவில் வைத்துக் கொள்வது முக்கியமாகும். காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் கொடுப்பனவு பத்திரத்தின் இடை பகிரல் அலகு மற்றும் சரியான அரைப்பகுதி என இரண்டு காரணங்கள் கொடுப்பனவு பத்திரத்தின் நிபந்தனைகளில் குறிப்பிடப்படும். அதனைப் புரிந்து கொள்வது எமக்கு பயனுள்ளதாக இருக்கும். இடை பகிரல் அலகுகள் என்பது கொடுப்பனவு பத்திரத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ள காணி பிரிக்கப்படக் கூடிய பகுதிகளின் எண்ணிக்கையாகும். உதாரணமாக, இடை பகிரல் அலகு 40 பேச்சஸ்கள் எனின், கொடுப்பனவு பத்திரத்தில் ஒரு ஏக்கர் எனின், இடை பகிரல் அலகு 1/4 ஏக்கராக, அதாவது 40 பேச்சஸாக இருக்கும்.

மேலே குறிப்பிட்ட உதாரணத்திற்கு அமைய ஒரு ஏக்கர் நிலத்தின் ஆகக் குறைந்த பகிரல் அலகு 1/4 ஏக்கர் எனின், அதுவே ஆகக் குறைந்த அரைப்பகுதியாகும்.

NMM A.Sujan
Colonization Officer



# நான் கண்ட வீதி விபத்து

பாடசாலையில் இருந்து வீடு திரும்பிக் கொண்டு இருந்தேன். தெருவோரமாக வந்து கொண்டிருந்து வயோதிபர் ஒருவர் எதிரே வந்து கொண்டிருந்த மோட்டார் கார் ஒன்று திடீரென மோதியது. பாவம்! வயோதிபர் தெருவில் தூக்கி வீசப்பட்டார்.அவரது தலையில் பலத்த அடிபட்டிருந்தது. அவரது கால்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருந்தது. பலத்த காயங்கள் காணப்பட்டன. வயோதிபர் சுயநினைவை இழந்து விட்டார். பிணம்போல வீதியில் கிடந்தார். அவரை மோதிய மோட்டார் கார் நிற்காது ஓடி மறைந்தது.

நான் அதன் இலக்கங்களை கவனித்தமையால் அதனை எனது கொப்பியில் குறித்துக் கொண்டேன். வீதியில் வந்த மக்களின் உதவியுடன் வயோதிபரை தூக்கிச் சென்று ஒரு கடைக் கட்டடத்தில் கிடத்தினோம். அயலிலுள்ள மோட்டார் கார் சாரதிக்கு இது பற்றி தகவல் கொடுத்தேன். உடனடியாக அவரது மோட்டார் வண்டியை கொண்டுவந்து காயப்பட்ட வயோதிபரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றோம். ஏன்னுடன் எனது பாடசாலை மாணவர்கள் இருவரும், பொதுமக்கள் மூவரும் வைத்தியசாலைக்கு வந்திருந்தனர்.

வயோதிபருக்கு அங்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டது. இரண்டு மணி நேரமாக அவருக்கு சுயநினைவு திரும்பவில்லை. அவரது தலையிலும் காலிலும் அடிபட்ட இடங்களில் கட்டு போடப்பட்டது. உயிருக்கு எவ்வித ஆபத்துமில்லை என பரிசோதித்த வைத்தியர்கள் கூறினார்கள். இதன் பின் எங்கள் மனம் நிம்மதி அடைந்தது. வைத்தியசாலையிலிருந்து நேரே பொலிஸ் நிலையத்திற்கு சென்றோம். இங்கு நடந்த விடயம் குறித்து தெரிவித்தோம். வயோதிபரை மோதிவிட்டு ஓடி மறைந்த மோட்டார் காரின் இலக்கங்களைக் கூறினோம். பொலிஸ் அதிகாரி உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக கூறினார். அதன் பின்னர் வீடு வந்து சேர்ந்து நடந்தவற்றை அம்மாவிடம் கூறினேன். அன்றைய நாள் எனக்கு மறக்க முடியாத நாளாக இருந்தது.

இ. பிரனுஷ்ஷா
பாண்டிருப்பு



P.Karshan
BT/PD/Mandoor
Ramakrishna Vidyalayam



# கிராம மக்களின் வாழ்வும் வளமும்

கடந்த மாத இதழின் தொடர்ச்சி...



சா.செல்வசிகாமணி
ஓய்வுநிலை அதிபர்
மத்தியமுகாம்.

வணக்கம் என் வாசக உறவுகளே. மலர்ந்த "விசுவாவசு" புதுவருட நல்வாழ்த்துகள் தங்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும். நம்பிக்கைதான் வாழ்க்கை அதே நம்பிக்கையில்தான் உலகமே ஓடிக்கொண்டிருக்கின்றது. சரி கடந்தமாத இதழிலே சோதிடத்தோடு, ஒருசோதிடர் தொடர்பான தகவல்களையும் பார்த்தோமல்லவா. இம்மாதம் இன்னும் சில சோதிடர்களைப்பற்றி பார்க்கலாமா?

எமது பிரதேசத்திற்கு நாவிதன்வெளி எனப்பெயர்வரக் காரணமாய் அமைந்த அந்தப்பழம்பெரும் கிராமத்தில் ஓர் ஆசிரியராக, பின் இந்துசமய ஆசிரிய ஆலோசகராக அரச பணியாற்றிக்கொண்டு சோதிடராகவும் சேவை செய்தவரே திரு. ஆறுமுகம் பிள்ளையான்தம்பி ஐயா அவர்கள். இவரும் பிறப்பு ஜாதகக் குறிப்புக்கள், பெண்பிள்ளைகளின் ருதுவான குறிப்புக்கள் போன்றவற்றை பஞ்சாங்கத்தின்படி பார்த்துக் கூறுவது, வெற்றிலை பாக்குவைத்துப் பார்த்து வெற்றிலையில் உதித்ததை பஞ்சாங்கத்தோடு கணித்துக் கூறுவதும் இவரால் செய்யப்படும். இக்காரியம் காலை வேளையிலே இடம்பெறுவதனால் இவரது நாவிதன்வெளி வீட்டில் பலர் காலை வேளைகளில் இவரது சேவையைப் பெறுவதற்காகக் காத்துக்கொண்டிருப்பார்கள்.

பொறுமையாக ஒவ்வொருவராக அழைத்து அவர்களுக்கான சேவையை இவர் வழங்குவார். திரு. பிள்ளையான்தம்பி ஐயா அவர்கள் அமைதியாகவும் சாந்தமாகவும் காணப்படுவார். நகைச்சுவையாகப் பேசுவார். இவரது இந்து சமய சொற்பொழிவுகள் இந்து ஆலயங்களில் நடைபெறுவதுண்டு. அடியவர்களை நகைச்சுவையாகவும் சுவாரசியமாகவும் பேசி பலமணிநேரம் தன்வசப்படுத்தி வைத்திருப்பார். மக்களும் சலிப்பின்றி மகிழ்ச்சியாகவும், உற்சாகமாகவும் கேட்டு இரசித்துக் கொண்டிருப்பார்கள். அத்தகைய பெருந்தகை இன்று எம்மோடு இல்லை. இறையடி சேர்ந்துள்ளார். அவருக்கு எமது சமூகத்தின் சார்பில் நன்றிசெலுத்திவிட்டு, மற்றுமொரு சோதிடரைப் பார்க்கலாம்.

மத்தியமுகாம் நகருக்குத் தெற்கிலே அமைந்துள்ள வேம்படித்தோட்டம் கிராமம், இது நான்காம் கிராமமாகும். இது கடந்த வன்செயல்காலத்திலே பல உயிர்களையும் உடமைகளையும் இழந்து பல ஊர்களுக்குச் சென்று சொல்லமுடியாத துயர்களையும் வடுக்களையும் சுமந்து வாழ்ந்து பின் மீளக்குடியமர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கும்எம்மவரின் கதைகூறும் பழம்பெரும் கிராமம் இது என்பதே சாலப்பொருந்தும்.

இம்மக்களோடு மக்களாக வாழ்ந்த சோதிடர்கள் இருவர் பற்றியே தங்களோடு பகிரப்போகின்றேன். முதலாமவர் திரு. மார்க்கண்டு சோதிடர் ஐயா அவர்கள். இவரை நான் அனேகமாக சேட் அணிந்து கண்டதில்லை. வெள்ளை வேட்டி, வெள்ளை சால்வை கையிலே பஞ்சாங்கமும் குறிப்பு புத்தகங்களும் கொண்டு குடையுடன் நடந்து செல்வார். சற்றுக் கறுப்பு நிறமும் தடித்த தோற்றமும் கொண்டவர். இவரும் நான் முன்னர் கூறிய சோதிடர்கள் போன்றே குறிப்புக்களின் அடிப்படையில் சோதிடம் கூறுவார். எமது தேவைக்கேற்ப அழைத்தால் வீடுகளிற்கே வந்து தமது பணியை ஆற்றிச் செல்வார்.

மக்கள் சேவை செய்து இறைபதம் சேர்ந்த மார்க்கண்டு சோதிடர் ஐயா அவர்களையும் வாழ்த்திவிட்டு, வேம்படித்தோட்டத்தில் வாழ்ந்து சோதிடர் சேவைசெய்த மற்றையவரான திரு. முத்துலிங்கம் சோதிடர் ஐயா பற்றிப் பார்க்கலாம். இவரும் ஏனைய சோதிடர்களைப் போன்று அதே குறிப்புக்களின் அடிப்படையில் சோதிட சேவை செய்தவர். இவரும் எமது அழைப்பின் நிமித்தம் எமது இல்லங்களுக்கே வந்து சோதிடம் கூறுவார். தடித்த தோற்றமும் அமைதியான சுபாவமும் கொண்டவர். அவரது சேவைக்கும் நாம் தலை வணங்குவோம்.

அடுத்ததாக நான் சோதிடர் சேவையில் சுடர்விட்டுக் கொண்டிருக்கும் திரு. சீ. கிருஸ்ணமூர்த்தி ஐயா அவர்களிடம் உங்களை அழைத்துச் செல்லப்போகின்றேன். இத்தொடரில் நான் முன்பு வழங்கியிருந்த சர்ப்பவிச வைத்தியர் திரு. பொன்னையா சீனித்தம்பி அவர்களின் மகனே இவராவார். பதினோராம் கிராமத்தில், மத்தியமுகாம்- 06இல் வாழ்ந்து கொண்டு தனது விவசாயத் தொழிலோடு சோதிடச் சேவையையும் செய்து கொண்டிருக்கின்றார். இவரும் ஜாதகக் குறிப்புக்கள் பார்த்துக் கூறுதல், வெற்றிலை பாக்குபார்த்துக் கூறுதல் போன்ற சேவையை வாக்கிய பஞ்சாங்க முறைப்படியும், திருக்கணித முறைப்படியும் கூறுவார். சமகாலத்திலே தனது வாக்கு உண்மை என்பதை நிரூபித்துக்கொண்டு மக்கள் மனதை வென்ற சோதிடராகத் திகழ்ந்து கொண்டிருக்கின்றார். ஒவ்வொரு வருடமும் 11ஆம் கிராம ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய நாட்காட்டி வெளியீட்டு விழாவிலும் நாட்காட்டி தொடர்பாகவும் வருட பலாபலன்கள் தொடர்பாகவும் திரு. சீ. கிருஸ்ணமூர்த்தி சோதிடர் ஐயா அவர்களின் விளக்கப்பேருரை இடம்பெறுவது வழக்கமாகும். இந்நிகழ்விற்கு அவரைப் பிரதம அதிதியாக அழைப்பதும் அவரது விளக்க உரையை மக்கள் செவிமடுக்கச் செய்வதும் இப்பிரதேச மக்கள் அவர்களுக்கு வழங்கும் கௌரவத்தின் அடையாளங்கள் என்பதே நிதர்சனம்.

தொடரும்...

# அன்றைய காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கும் இன்றைய காலத்தில் வாழ்கின்ற மனிதர்களுக்கும்



சுற்றுச் சூழல் என்றால் "எம்மை சுற்றியுள்ள இயற்கையின் ஒட்டு மொத்த அம்சங்கள்" இது நாம் அனைவரும் அறிந்த விடயமே! அவற்றுள் உயிரினங்களும் அவை வாழும் நீர், நிலம் மற்றும் வளி போன்றவை குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இப்புவிக் கோளமானது உயிரினங்கள் வாழ்வதற்கான சகல அம்சங்களையும் கொண்டிருப்பது இயற்கையின் அருங்கொடையாகும்.

அன்றைய காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கும், இன்றைய காலத்தில் வாழ்ந்த மனிதர்களுக்கும் இடையில் பரிணாம வளர்ச்சி, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றின் காரணமாக பல்வேறு வித்தியாசங்கள் இருப்பது நாம் அவதானிக்கக் கூடிய விடயமாகும். எது எவ்வாறு இருப்பினும் மனித வாழ்க்கைக்கு அவன் வாழும் இயற்கைச் சூழல் இன்றியமையாததாகும்.

முதலில் அன்றைய கால மனிதர்களது வாழ்க்கைப் பின்னணியினை நோக்குவோமானால் இயற்கையோடு இணைந்த ஆரோக்கியமான வாழக்கையினை வாழ்ந்தனர் என்பது தெட்டத் தெளிவான உண்மையாகும். காரணம் இயற்கையாக கிடைத்த உணவினை உட்கொண்டு, சுத்தமான நீரினை அருந்தி, தூய்மையான இயற்கை காற்றினை சுவாசித்து வாழ்ந்தனர். போக்குவரத்திற்கு மாட்டு வண்டி, குதிரை போன்றவற்றினைப் பயன்படுத்தி இருந்தனர். இதனால் இயற்கைச் சமநிலையில் எதுவித தளம்பல்களும் ஏற்படவில்லை.

ஆனால் காலப் போக்கில் பரிணாம வளர்ச்சி ஏற்பட்டதன் காரணமாக மனிதன் சிந்திக்க ஆரம்பித்தான். அதன் விளைவாக மனிதனின் முயற்சிகளும் வளர ஆரம்பித்தது. கைத்தொழில், விவசாயம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, ஆயுத உற்பத்தி, தொழில்நுட்பம் என சகல துறைகளும் சூழலை ஆதாரமாக வைத்தே அதன் அபிவிருத்தியும் இன்று உச்சத்தை எட்டியுள்ளது. இணைய வளர்ச்சியின் காரணமாக, "கோளம் ஒரு கிராமம்" என்கின்ற அளவிற்கு சுருங்கியுள்ளது. ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது வரவேற்கத்தக்க விடயமாகும். இருப்பினும் நாடு அபிவிருத்தியினை நோக்கும் போது இயற்கையின் சமநிலை குழம்புவதுதான் வேதனையளிக்கின்ற விடயமாகும். சனத்தொகை அதிகரிப்பின் காரணமாக இயற்கையான பசுமைக் காடுகளை அழித்தும், நீர் நிலைகளில் மண்ணை இட்டு நிரப்பியும் விண்ணைத் தொடும் அளவிற்கு மனிதன் குடியிருப்புக்களை அமைத்துக் கொண்டிருக்கின்றான். அதன் விளைவு தான் இன்று பருவ மழை பொய்த்துப் போய் காலம் தவறிய மழையினையும், வெள்ளப் பெருக்கினையும், வரட்சியினையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். மனிதனின் சுயநலச் செயற்பாட்டினால் இருப்பிடத்தினை இழந்த யானை, குரங்கு போன்ற விலங்குகள் குடியிருப்புக்குள் உட்புகுந்து உயிர்ச் சேதங்களையும், பொருள் சேதத்தினையும் ஏற்படுத்துகின்ற விடயம் அன்றாடச் செய்தியாகியுள்ளது. உணவு உற்பத்தியில் புரட்சியினை ஏற்படுத்தும் வகையில் இரசாயன உரங்களை விவசாயத்தில் பயன்படுத்தியதன் விளைவாக மண்ணின் இயற்கை வளம் குன்றிப் போனது, அது மாத்திரமின்றி மண்ணில் உள்ள பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் அருகிப் போயுள்ளன. இதன் விளைவு தான் இன்று மனித குலமே அழிவின் விளிம்பில் உள்ளது. நச்சுத்தன்மையான உணவுகளை உட்கொண்டதன் விளைவு தான் இன்று பரம்பரை அலகுகளில் மாற்றம்



ஏற்பட்டு புதிய தலைமுறை உருவாகுவது பாரிய சவாலாக அமைந்துள்ளது. அது மாத்திரமன்றி நம்மில் பலர் புற்று நோயாளர்களாகவும், சிறுநீரக நோயாளர்களாகவும், காரணம் கண்டறியப்படாத நோயாளர்களாகவும் அவதியுறுகின்றோம்.

விவசாயத்தில் களைகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற கிருமி நாசினிகளும், தொழிற்சாலைகளில் இருந்து வெளிவிடப்படுகின்ற திரவக் கழிவுகளும் நீர் நிலைகளில் கலப்பதன் மூலம் நீர் நச்சுத்தன்மையடைகின்றது. இதனை அருந்துகின்ற பல்லாயிரக்கணக்கான உயிர்கள் அழிவடைகின்றன. சுத்தமான நீர் என நினைத்து நாம் அருந்துகின்ற நீரும் நச்சுத்தன்மையானதே!



தொழிற்சாலைகளில் இருந்து வெளிவிடப்படுகின்ற புகை, யுத்தங்களின் போது பயன்படுத்தப்படுகின்ற நவீன ஆயுதங்களில் இருந்து வெளியேறும் நச்சுப் புகை, பழைய வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை, நாம் பயன்படுத்தி வீட்டு வீசுகின்ற பொலித்தீன் பைகள், பிளாஸ்ரிக் கொள்கலன்களை எரிப்பதனால் உருவாகின்ற புகை போன்றவை வளிமண்டலத்தில் கலப்பதனால் நாம் சுவாசிக்கின்ற வளியும் இன்று நச்சுத்தன்மையாகி விட்டது. இதன் விளைவு தான் இன்று பலர் சுவாச நோயாளிகளாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.



"ஒலி மாசடைகின்றது" எனக் கூறினால் நம்மில் பலருக்கு அது வினோதமான விடயமாகவே இருக்கும். யுத்த நிலைமைகளின் போது ஏற்படுகின்ற பாரிய சத்தம், வெடிப் பொருள்கள் வெடிக்கும் போது ஏற்படுகின்ற சத்தம், தொழிற்சாலை இயந்திரங்களில் இருந்து வெளியாகின்ற சத்தம் போன்றவற்றினால் இன்று ஒலியும் மாசடைகின்றது. இதன் விளைவாக மனிதனது கேட்டல்த் திறன் பாதிக்கப்படுவதுடன், இருதய நோயாளர்கள் பாதிப்பினை எதிர் கொள்கின்றனர்.

நமக்கான அழிவுப் பாதையினை நாமே வகுத்திருப்பதுதான் கவலைக்குரிய விடயமாகும். சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பில் உலக நாடுகள் பல்வேறு மாநாடுகளை நடாத்தி வருகின்றமையும், புதிய வகையான திட்டங்களை அமுல்படுத்தி வருவதும் வரவேற்கத்தக்கது. அந்த வகையில், எமது நாட்டின் கௌரவ ஜனாதிபதி அவர்களின் ‘ தூய்மையான இலங்கை

(Clean Sri Lanka) திட்டத்தின் கீழ் முறையான சுற்றுப்புறச் சூழலை உருவாக்குதல்“எண்ணக்கரு முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளமை மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்ற விடயமாகும். அதன் கீழ் வலுச்சக்தி பாவனை மீளாய்வு, கழிவுகளை வேறாக்கும் செயற்றிட்டம், மீள்சுழற்சி செயற்றிட்டம், மர நடுகை போன்ற வேலைத்திட்டங்கள் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். எது எவ்வாறு இருப்பினும் எமது சுற்றுச் சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்கின்ற உணர்வுடன் தனிநபர்கள் ஒவ்வொருவரும் செயற்படும் பட்டத்தில் சுற்றுச் சூழல் மாசடைதலானது தவிர்க்கப்படும்.

செல்வி. திருச்செல்வம் தர்சினி
நாவிதன்வெளி.



# கல்வியின் நோக்கத்தை வெற்றிகரமாக்குவதற்கான செயற்பாடுகள்

க.பொ.த(உ/த) பரீட்சைக்கு முகங்கொடுப்பதற்காக தங்களிடம் காணப்படும் பலம், பின்னடைவு, சந்தர்ப்பம் மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்பாக தற்பொழுது உங்களுக்கு விளக்கம் இருக்கும். கல்வியின் நோக்கத்தை வெற்றிகரமாக்குவதற்காக பலம், மற்றும் வாய்ப்புகளின் உயர்ந்தபட்சப் பயன்பாடுகளைப் பெற்றுப் பின்னடைவுகள் மற்றும் சவால்களைக் கருத்திற் கொண்டு அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ள வேண்டும். கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குரியதாக தங்களுக்கு தங்களது பின்னடைவுகள் மற்றும் அச்சுறுத்தல்களை நீக்கி கற்றல், நினைவில் வைத்திருத்தல், நேர முகாமைத்துவத்தின் மூலம் உயர்தரப் பரீட்சையை வெற்றிகரமாக்க முடிகிறது. இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட முறைகளைப் பின்பற்ற முடியும்.

## 1. சரியான குறிப்புக்களை எழுதுதல்.

## 2. நேர முகாமைத்துவம்.

- கற்றல், நித்திரை, களியாட்ட நிகழ்வு போன்ற சகல பணிகளின் போதும் நேரத்தை வகைப்படுத்தி காலத்தை முறையாக முகாமைத்துவப்படுத்தல்.
- மேற்கொள்ள வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்தவற்றை தீர்மானித்து அதற்குக் காலத்தை பயன்படுத்தி தேவையற்றவற்றிற்கு காலத்தை வீணடிக்காதிருத்தல்.
- நேரசூசியைத் தயாரித்தல்.
- நேரசூசியை வாரத்திற்கொருமுறை மறுசீரமைத்தல்.

## 3. கற்றலை இலகுவாக்கும் முறைகளைப் பின்பற்றல்.

- கற்பதற்காகப் பொருத்தமான சூழல் நேரத்தைத் தேர்ந்தெடுத்தல்.
- குறிப்பில் உள்ள அனைத்தும் விளங்கும்வரை குறிப்பை எழுதுதல்.
- அதற்குப் பின்னர் சிறு குறிப்பை எழுதுதல்.
- கற்கும்போது முடியுமான வரை நினைவில் வைத்திருக்கக்கூடிய இலகு முறைகளைப் பயன்படுத்தல்.
- சூத்திரம், புள்ளிவிபரங்கள் போன்றவற்றை நினைவில் வைத்திருப்பதற்கு இலகுவான முறைகளைக் கையாளல்.
- கடினமான விடயங்களை பாடல்களுக்கு மாற்றியமைத்தல் போன்ற முறைகளைப் பயன்படுத்தல்.
- கற்றவைகள் ஊடாக கேள்விகளுக்கு உரிய காலத்தை வழங்கிப் பதிலளித்தல்.

4. பாடசாலைக் கல்வியின் பின்னர் உயர்கல்வி தொழிற்பயிற்சிப் பாடநெறி மற்றும் தொழிலுக்காக பிரவேசித்தல்.

## 4.1 உயர்கல்விக்கான சந்தர்ப்பம்

பாடசாலைக் கல்வியின் பின்னர் வெற்றிகரமான தொழிலாளராக மாற்றம் பெற உயர்கல்விக்குப் பிரவேசிப்பதன் மூலம் சந்தர்ப்பத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். உயர்கல்வி உள்நாட்டு ரீதியில் அரசு மற்றும் தனியார் துறை ஊடாகவும் வெளிநாட்டிலும் பெற்றுக்கொள்ள முடியும். உள்நாட்டில் உயர்கல்விக்குப் பிரவேசிக்கும் போது உயர்தரப் பரீட்சையில் தோற்றிய பாடவிதானங்கள் மிக முக்கியமாகும். இதனடிப்படையில் கலை, வர்த்தகம், விஞ்ஞானம் மற்றும் கணிதத் துறைகளின் மூலம் உயர்தரம் சுற்ற மாணவர்களுக்கு கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு உயர் கல்வியில் பிரவேசிப்பதற்கு இயலுமை உள்ளது. (இலங்கை பல்கலைக்கழகங்கள் மூலம்)

| விஞ்ஞானப் பிரிவு | கணிதப் பிரிவு |
|---|---|
| மருத்துவத் துறை | பொறியியல் |
| பல் வைத்தியம் | இலத்திரனியல் |
| மிருக வைத்தியம் | மின்னியல் |
| விவசாயம் | இயந்திரவியல் |
| மருந்தாக்கவியல் | கட்டிடக் கலை |
| போசாக்கு | பௌதிகவியல் |
| உணவியல் | கணக்கியல் |
| பௌதிகவியல் | |
| உயிரியல் | |

| வர்த்தகப் பிரிவு | கலைப் பிரிவு |
|---|---|
| கணக்கியல் | சமுகவியல் |
| வர்த்தகவியல் | சட்டம் |
| முகாமைத்துவம் | புவியியல் |
| வர்த்தக நிருவாகம் | புவிச்சரிதவியல் |
| பொதுநிருவாகம் | உளவியல் |
| வர்த்தக முகாமைத்துவம் | பொருளியல் |
| மனிதவள முகாமைத்துவம் | |
| விற்பனை முகாமைத்துவம் | |

மேற்கூறப்பட்டவாறு பல்வேறுபட்ட பாடத் துறைகளுக்கமைய சான்றிதழ் பாடநெறி, டிப்ளோமாப் பாடநெறி, பட்டப் பாடநெறி மற்றும் பட்டப்பின் பட்ட டிப்ளோமா பாடநெறி, பட்டப்பின் பட்டம் ஆகிய பல்வேறுபட்ட மட்டங்களில் உயர்கல்வியைத் தொடர முடியும். அத்துடன், மேற்கூறப்பட்ட பாடநெறி வெளிவாரி மற்றும் உள்வாரியாக கற்பதற்கான சந்தர்ப்பம் உள்நாடு மற்றும் வெளிநாட்டில் உள்ளது.

## 4.2 தொழில் தகைமை (Professional Qualification)

கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையின் பின்னர் உயர் கல்விக்காக பிரவேசிப்பவர்களைப் போன்று உயர்கல்விக்கு பிரவேசிக்க முடியாதவர்களுக்கும் ஏனைய பயிற்சிப் பாடநெறியைத் தொடர்ந்தும் அப்பாடநெறியை அடிப்படையாகக் கொண்டு தொழில்ரீதியில் தகைமைகளைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் துறைசார்ந்த தொழில்சார் பதவிகளுக்கு பிரவேசிப்பதற்கான இயலுமை காணப்படுகின்றது. எத்தகைய பாடவிதானங்கள் மூலமும் க.பொ.த(உ/த) தகைமை பெற்றோருக்கும் திறமை மற்றும் விருப்பத்திற்கமைய கீழ்க் குறிப்பிடப்பட்ட நிறுவனங்கள் மூலம் தொழில்சார் பாடநெறிகளைத் தொடர்ந்து தொழிலாளியாக மாற்றம் பெற முடியும்.

- ### தகவல் தொழில் நுட்பம்

கணனி டிப்ளோமா
BCS/ACS/NECS கொழும்புப் பல்கலைக் கழகத்தின் மற்றும் BIT/SLIIT/NIBM போன்ற நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்ட கணனிப் பயிற்சிகளை வழங்கும் கணனி நிறுவகங்கள் ஆகும்.

- ### விற்பனைத் துறை

விற்பனைத் துறை தொடர்பான டிப்ளோமா (விற்பனை தொடர்பான பட்டயப் பரீட்சை).
இலங்கை விற்பனையாளர்களின் நிறுவகம்.
அமெரிக்க ஐக்கிய இராச்சியத் தினால் நடாத்தப்படும் பரீட்சை C.I.M.

- ## கணக்கியல் துறை

AAT பட்டயக் கணக்காளர் பாடநெறி.
CIMA முகாமைத்துவக் கணக்கியல் தொடர்பான பட்டயப் பரீட்சை.
பட்டயக் கணக்காளர் நிறுவகம்.
கணக்காளர் நிறுவகம்.
CIMA முகாமைத்துவம், கணக்கியல் தொடர்பான பட்டய நிறுவகம்.



- ## மனிதவள முகாமைத்துவத் துறை

மனிதவள முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறி.
NIBM, திறந்த பல்கலைக் கழகம்.
IPM(ஆளணி முகாமைத் துவம் தொடர்பான நிறுவகம்)
சட்டத்துறை.
சட்டத்துறை சார்ந்த பட்டம் சட்டம் தொடர்பான தொழில் சார் பாடநெறி.
கொழும்புப் பல்கலைக்கழகம்.
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.





- ## பொறியியல் துறை

பொறியியல் பாடநெறி.
கட்டிடக் கலை தொடர்பான பாடநெறி.
பல்கலைக்கழகம் திறந்த பல்கலைக்கழகம்.
இலங்கை பொறியியல் நிறுவகம் (IESL).
இலங்கை கட்டிடக் கலைஞர்களின் நிறுவகம்.



- ## சுற்றுலா மற்றும் ஹோட்டல் துறை

துறை சார்ந்த டிப்ளோமாப் பாடநெறி
இலங்கை ஹோட்டல் பாடசாலை



- ## அச்சுத்துறை

அச்சு தொடர்பான பாடநெறி
நிறுவகம்(ICSA) இலங்கை அச்சகர்களின் நிறுவகம்
இன்கிறீன் நிறுவகம்.



- **களஞ்சிய நிருவாகம்**

களஞ்சிய நிருவாக பாடநெறி.
இலங்கை பொருள் முகாமைத்துவ நிறுவகம்(ISMM).

## 4.3 தொழிற் பயிற்சி (Vocational Training)

உயர்கல்வி அல்லது தொழிற்தகைமையைப் பெற எதிர்பார்க்காதோர் தொழிற்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக அரச, தனியார், அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலம் நடாத்தப்படும் பயிற்சிப் பாடநெறியைத் தொடர முடியும்.

- © கணனித் துறைசார் தொழில்.
- © வரவேற்பு உத்தியோகத்தர்.
- © செயலாளர்கள்.
- © களஞ்சியப் பொறுப்பாளர்கள்.
- © விமான ஊழியர்கள்.
- © வெயிற்றர்.
- © புகைப்படக் கலைஞன்.
- © மாணிக்கம் மற்றும் அது சார்ந்த தொழில்.
- © அச்சகத் துறை சார்ந்த தொழில்.
- © கிரபிக் ஆக்கக் கலைஞர்கள்.
- © ஒப்பனைக் கலைப் பாடநெறி/ சிகை அலங்காரம்.
- © வடிவமைப்பு ஆக்கக் கலை.

தொழிற்பயிற்சி அதிகாரசபை, தொழில்நுட்பக் கல்லூரி, தேசிய பயிலுனர் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிஅதிகார சபை போன்ற அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களின் மூலம் இப்பாடநெறியைத் தொடர முடியும்.

- © கடதாசி துணி சார்ந்த தொழில்.
- © பூந்தோட்ட அலங்காரம்.
- © மலர் அழகு செடிப் பயிர்ச் செய்கை.
- © தென்னஞ் சிரட்டையிலிருந்து நீக்கப்படும்.
- © நார்களைப் பயன்படுத்தி அது சார்ந்த தொழில்.
- © மலர்ச்செடி வளர்ப்பு.
- © செயற்கை மலர் தயாரிப்பு.

கைத்தொழில் அபிவிருத்தி சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை, சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி, அரச சார்பற்ற அமைப்புகள் அபிவிருத்திப் பிரிவுகள் போன்ற அரச நிறுவனங்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் தனியார் பயிற்சிப் பாடநெறிகள் நடாத்தப்படும் நிறுவனங்கள் மூலம் இது தொடர்பான பாடநெறிகளைத் தொடர முடியும்.

இத்தொழிற்பயிற்சியைப் பெற்றதன் பின்னர் சம்பளம் பெறும் தொழில் ஒன்றில் பிரவேசித்தல், தமது சுயாதீன தொழிலாக மேற்கொள்ள மற்றும் சுய தொழில் அல்லது சுய வர்த்தகமாக மேற்கொள்ள முடிகிறது.





# Real Happiness and Bliss Depend on Living Beyond Dualities in the World

Balasingham Sajindren, Pandiruppu

In a world governed by constant contrasts-pleasure and pain, success and failure, praise and criticism-humans often find themselves caught in an endless pursuit of happiness. This pursuit, however, is frequently limited by their attachment to these dualities. True happiness, or bliss, is not a fleeting emotional high sparked by positive circumstances, but a deep, abiding state that arises when one transcends dualistic thinking. Living beyond dualities means embracing life in its entirety, accepting both light and shadow without resistance. Through the insights of philosophy, spirituality and modern psychology, it becomes clear that real bliss is found not in choosing one side over the other, but in rising above the entire spectrum.

## Understanding Duality

Duality refers to the concept that everything in our physical world exists in pairs of opposites: good and bad, joy and sorrow, life and death, rich and poor. Our minds are conditioned to favour one side while rejecting the other. For example, we chase success and avoid failure, seek praise and shun criticism. But in doing so, we become dependent on external conditions for our inner well-being.

Eastern philosophies, particularly Vedanta and Buddhism, emphasize the limitations of such dualistic living. The Bhagavad Gita, a key Hindu scripture, teaches that the wise are those who remain “equanimous in success and failure.” In Buddhism, detachment from desire and aversion is a foundational principle. The more one is entangled in duality, the more one suffers when the pendulum inevitably swings.

## The Trap of Conditional Happiness

Most people’s definition of happiness is conditional. “I’ll be happy if I get this job,” or “I’ll be at peace once this problem is solved.” But life is unpredictable, and conditions are constantly changing. A person may experience joy from a promotion, only to be stressed a month later due to work pressure. Similarly, someone may suffer a breakup but later realize it was a blessing in disguise. These emotional highs and lows reflect the volatility of a dualistic mindset.

Consider celebrities and billionaires-individuals who seemingly have it all. Despite fame, wealth and admiration, many struggle with depression, anxiety or addiction. Their inner discontent exposes a deeper truth: external abundance does not equate to lasting inner peace. It shows that happiness built on dualities is inherently unstable.

Transcending Duality: Lessons from Spiritual Traditions
In Advaita Vedanta, the term “non-duality” or “Advaita” means recognizing the oneness underlying apparent opposites. The realized soul, or “Jnani,” sees joy and sorrow, gain and loss, as passing waves on the ocean of consciousness. By not identifying with either, the individual remains anchored in bliss.

Take the example of Ramana Maharshi, a revered Indian sage. Despite enduring painful illness in his later years, he remained serene and unaffected. When asked if he felt pain, he replied, “There is pain in the body, but I am not the body.” His detachment from the dualities of health and illness allowed him to rest in an unshakable peace.

In the Taoist philosophy, Lao Tzu emphasizes harmony with the Tao-the natural flow of the universe-which includes both yin and yang. He writes, "He who knows that enough is enough will always have enough." This points to contentment that arises not from control, but from surrender to what is.

## Modern Psychology and Mindfulness

Contemporary psychology echoes these ancient truths through the concept of mindfulness. Mindfulness encourages individuals to observe thoughts and emotions without judgment or attachment. This creates a space where one is no longer swept away by desires or aversions.

Research shows that people who practice mindfulness and acceptance have greater emotional resilience. They report higher levels of well-being because they are not constantly resisting reality. By observing both pleasant and unpleasant experiences with the same calm presence, they embody non-dual awareness.

For instance, in Acceptance and Commitment Therapy (ACT), clients are taught to embrace discomfort rather than avoid it. A person with social anxiety learns to acknowledge their fear without letting it control their actions. As a result, they regain freedom and joy-not by eliminating fear, but by making peace with it.

## Examples from Everyday Life

Imagine a student who studies hard but fails an important exam. A dualistic mind might say, "I am a failure," leading to despair. But a non-dual perspective recognizes the failure as a temporary event, not an identity. The student may even discover new interests or career paths because of this detour.

Similarly, consider a mother raising a child with special needs. Society might label her experience as one of sacrifice and hardship. But if she transcends the labels of "good" or "bad," she might find profound meaning and deep love in her journey-moments of bliss that exist beyond societal judgments.

In relationships, duality often shows up as expectations: "If they love me, they'll act this way." But real connection arises when both partners move beyond demands and accept each other as they are-flaws, quirks and all. Bliss emerges not from perfection but from presence.

## Living Beyond Dualities in a Practical Way

So, how can we live beyond dualities in daily life?

Practice Equanimity: Train your mind to remain balanced in all situations. Whether you receive praise or criticism, treat it like passing weather.

Meditate Regularly: Meditation helps to still the mind and witness thoughts without judgment. It builds awareness of the space beyond duality.

Accept What Is: Instead of labelling experiences as "good" or "bad," simply observe them. This acceptance reduces resistance and increases peace.

Detach from Outcomes: Focus on your actions, not on the fruits they yield. This attitude, known as "Nishkama Karma" in the Gita, is key to inner freedom.


Seek Meaning, Not Pleasure: Lasting happiness comes from living a life of purpose and connection, not just from momentary pleasures.

## Conclusion

True happiness is not a product of favourable circumstances, nor is it the elimination of suffering. It is a state of being that arises when one transcends the dualities that dominate the mind. Bliss is not found in chasing joy or avoiding pain, but in accepting both with open arms. When we live from a place beyond opposites, we tap into a stillness and fullness that nothing in the external world can disturb. In this space, we are free-not because life is perfect, but because we are no longer enslaved by its ever-changing tides. This is the secret of real happiness: to live beyond duality is to live in peace.

# இயற்கை மருத்துவச் சிகிச்சைகளில்

## உபவாசம் இருத்தல்



இயற்கை மருத்துவ சிகிச்சைமுறைகளில் உபவாசம் இருப்பது மிகச் சிறந்ததாகும் மனிதர்களாகிய எமக்கு ஏற்படும் அனைத்து நோய் நொடிகளையும் வெற்றி கொள்ளச் செய்து உன்னத உயிரைக் காக்கும் முறையாகும். உடல், உள்ளம், உயிர் இம் மூன்றையும் காப்பதற்கு நாம் உடனடியாக செல்லுமிடம் வைத்தியசாலையாகும். அங்கு எமக்கு வழங்கப்படும் மருந்துகள், மாத்திரைகள், ஊசிகள் மற்றும் அறுத்தெறியும் சிகிச்சைகள் எதுவுமின்றி சாதாரணமாக கடைப்படிக்கப்படும் உபவாசமுறைமூலம் ஏற்படும் சகல வியாதிகளையும் களைந்து ஆரோக்கியமாக வாழலாம்.

சாதி,சமயம், மதம் கடந்து இந்த உபவாச முறை மனிதனை புனிதமாக்குகின்றது என்றும் கூறலாம் இது விரதம், உபவாசம், நோன்பு நோற்றல் இன்னும் பல சொல்லாடல்கள் மூலம் இறையன்பை பெறுவதற்கும் இறைநிலைக்கு அவனருகில் செல்வதற்குமான பேராற்றலை எமக்கு வழங்குகிறது. முக்கியமாக மனித மனம் ஒரு கட்டுப்பாட்டு ஓய்வு நிலைக்கு வருகின்றது. உடல் சமநிலை என்பதும் பேணப்படுகின்றது.

பொதுவாக எமது உடலின் முக்கிய உறுப்புக்களான இதயம், சிறுநீரகம், மூளையோடு இணைக்கப்பட்டுள்ள நரம்புகள், மூச்சுக் குழாய்கள் என்பவற்றில் ஏற்படும் அடைப்புக்களை அகற்றுவதன் மூலமும், உடலிலிருந்து வெளியேற்றப்படாமல் தேங்கியுள்ள கழிவுகள் வெளியேற்றப்படுவதனாலும் நோய்கள் எம்மைப் பீடிப்பதிலிருந்து நாம் விடுதலை பெறுகின்றோம்.

இதற்கு இந்த உபவாசமே எமக்கு உறுதுணையாக உள்ளது. உண்மையிலேயே உடல் கழிவுகள் அகற்றப்படுவதன் மூலம் மனிதனின் உடல் நோயற்ற நிலையை அடைதல் அறிவியல் பூர்வமான உபவாச நிலையின் தெளிவான நிலையாகும். இவ்விடயம் மனிதர்கள் மட்டில் அவரவர் கடைப்பிடிக்கும் சமய நெறிமுறைகள் மூலமாகவும் வலியுறுத்தப்பட்டும் கட்டாயமாக்கப்பட்டும் இதன் சிறப்பு உணர்த்தப்படுகின்றது.

இதற்கு இன்னும் வலுவூட்டுவனவாக எமது வீடுகளிலும் சுற்றுப்புறச் சூழல்களில் உள்ள நாய்,பூனை,பசு போன்ற வீட்டுப் பிராணிகள், விலங்குகள் நோய் வாய்ப்படும்போது அவைகள் முற்றாக உணவைத் தவிர்த்து அல்லது வெறுத்து ஒதுக்கி தன் உடல் நிலை சீராக வந்த பின்னரே நீராகாரமோ, உணவோதேடி உண்ணும் நிலைக்கு வருகின்றன. இவ்விடத்தில் அவைகளால் கடைப்பிடிக்கப்படுவது உபவாசமாகும். இவ்வாறு இருப்பதன் மூலமும் தனது உடலின் சம நிலையை பேணிய பின்னரே ஆகாரத்தில் நாட்டம் செய்கின்றன. இந்நிலை அதாவது நோயுற்ற பின் அந்நோயை குணப்படுத்தும் நோக்கோடு உபவாசமிருப்பதற்கு லங்கணம் என்று பெயர். இதனைத்தான் லங்கணம் பரம ஔசதம் என்றும் கூறுவர். பட்டினியே மிகச்சிறந்த மருந்து என்றும் பொருள்படும்.

அநேகமான நோய்கள் மனிதர்களுக்கு உருவாக காரணமாக இருப்பது தவறான ,மித மிஞ்சிய உணவு உண்ணும் பழக்க வழக்கங்களாகும். பொதுவாக எமது உடலில் நோய் நிவாரணிகளாக எம்மால் பாவிக்கப்பட்ட மாத்திரைகள், ஊசி மருந்துகள் என்பனவற்றின் நஞ்சுகள் தேங்கியிருந்து இந்த உபவாசம் மூலம் வெளியேற்றப்படுகின்றன. சிறுநீரகம் கூட தனது கழிவுகளை சிவப்பு, மஞ்சள் நிறமாக வெளியேற்றும் தன்மை கொண்டது. மார்புச்சளி கூட துரிதமாக வெளியேற்றப்படுகிறது. பல வருடமாக தொல்லை கொடுத்த மூட்டு வலிகள் கூட பறந்தோடி விடுகின்றன. ஒரு சில புற்றுநோய்கள் கூட இவ்வுபவாசத்தால் குணமடைகின்றன. இவ்வாறே ஆஸ்மா, சைனஸ், சிறுநீரக செயலிழப்பு என்பன கூட குணமடைகின்றன. அண்மைக்கால ஆராய்ச்சி மூலமாக எயிட்ஸ் நோயாளியும் உபவாசம் கொண்டால் அந்நோய்கூட வெகு சீக்கிரம் தொலைந்தோடிவிடும் என்றும் கூறுகின்றார்கள்.

கி.யோகலிங்கம்,
பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

# விதவிதமான அசைவ சமையல் செய்முறை



உணவு என்பது அனைவருக்கும் மிகவும் அவசியமான அடிப்படைத் தேவையாகும். அத்தகைய உணவில் சைவம் மற்றும் அசைவம் ஆகிய இரண்டு வகைகள் உண்டு. காய்கறிகயை சமைத்து சாப்பிடும் சைவ உணவைப் போன்றே அசைவ உணவிற்கு மக்களிடையே பெரும் வரவேற்பு உள்ளது. பெரும்பாலும் வீட்டில் அனைவரும் ஒன்றாக இருக்கும் விடுமுறை நாட்களில் அசைவம் சமைத்து சாப்பிடுவது வழக்கம். அந்த அசைவத்தில் மட்டன், சிக்கன், முட்டை, மீன், நண்டு, இறால், போன்றவை இதில் அடங்கும். சிலர் ஒரே முறையில் தான் அசைவத்தை எப்போதும் சமைத்து சாப்பிடுவார்கள்.

வித்தியாசமாக அசைவம் சாப்பிட வேண்டி பலர் உணவு விடுதிகளை நாடுகின்றனர். அந்த சமையல்கள் ஒரு சிலருக்கு உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. இதையெல்லாம் தவிர்த்து நாமே நம் வீட்டில் அனைத்து விதமான அசைவ உணவுகளையும் வித்தியாசமாக எப்படியெல்லாம் சுவையாக சமையல் செய்யலாம் என இங்கு பார்க்கலாம்.

*R.Rupiga*
*Development Officer, Navithanveli*

## மட்டன் பிரியாணி



### தேவையான பொருட்கள்

* பாசுமதி அரிசி - 1 கிலோ
* மட்டன் - 1/2 கிலோ
* சின்ன வெங்காயம் - 1/2 கிலோ
* தக்காளி - 1/2 கிலோ
* பழுத்த பச்சை மிளகாய் - 5
* தயிர் - ஒரு கப்
* கொத்தமல்லி தாழை - 1/4 கப்
* இஞ்சி, பூண்டு விழுது - 2 ஸ்பூன்
* புதினா - 1/4 கப்
* கறுவா பட்டை - 2
* ஏலக்காய் - 2
* கராம்பு - 2
* பிரியாணி இலை - 2
* எலுமிச்சை சாறு - 3 ஸ்பூன்
* உப்பு - தேவையான அளவு
* எண்ணெய் - தேவையான அளவு
* நெய் - தேவையான அளவு

### செய்முறை:

*மட்டன் பிரியாணி செய்வதற்கு முதலில் ஒரு பாத்திரத்தில் அரிசியை போட்டு, தேவையான அளவு நீர் ஊற்றி ஊற வைத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு மற்றொரு பாத்திரத்தில் மட்டன் துண்டுகளைப் போட்டு நீர் ஊற்றி, நன்கு கழுவி நீரை வடிகட்டி விட வேண்டும்.

* வெங்காயத்தை நீள நீளமாகவும், தக்காளியைப் பொடி பொடியாகவும் நறுக்கி வைத்துக்கொள்ள வேண்டும். பிரியாணி சமைக்கக் கூடிய பாத்திரமொன்றை அடுப்பில் வைத்து சூடானதும், அதில் எண்ணெய்யை ஊற்றி, அதில் பட்டை, ஏலக்காய், கிராம்பு, பிரியாணி இலை போட்டு தாளித்து, அதனுன் நறுக்கி வைத்துள்ள வெங்காயத்தைச் சேர்த்து நன்கு வதக்க வேண்டும்.

* வெங்காயம் நன்கு வதங்கியதும், அதனுடன் இஞ்சி பூண்டு விழுது மற்றும் பழுத்த பச்சை மிளகாய் ஆகியவற்றை சேர்த்து வதக்க வேண்டும். அடுத்து தக்காளியைச் சேர்த்து வதக்க வேண்டும். பிறகு புதினா, தயிர், கொத்தமல்லித்தாழை, தேவையான அளவு உப்பு, மட்டன் துண்டுகள் ஆகியவற்றைச் சேர்த்து நன்கு கிளறி, அடுப்பை சிம்மில் வைத்து மட்டனை கிரேபி பதம் வரும் வரை வேக விட வேண்டும்.

* மட்டன் துண்டுகளுக்கு தகுந்தாற்போல் நீரை ஊற்றி ஒரு கொதி வந்ததும், அதில் அரிசியைப் போட்டு கொதிக்கவிட்டு கடைசியாக சிறிது நெய், எலுமிச்சை சாறு பிழிந்து விடல் வேண்டும். பிறகு நன்கு சாதம் வெந்தவுடன் பாத்திரத்தை இறக்கி மேலிருந்து கீழாக சாதம் குளையாமல் லேசாக கிளறினால் சுவையான மட்டன் பிரியாணி ரெடி.






# என் உணர்வுகளே!

உன் நிலை கண்டு - என்
இதயம் தினம் தினம் வெடிக்கிறதே!

ஏன் இந்த அவலம் என்று
முப்பொழுதும் தவிக்கிறதே!

கனவே என் பொழுதே!
கானல் நீராய் கரைகின்றதே!

கண் கொண்ட காட்சியெல்லாம்
கணப் பொழுதில் மறைகின்றதே!

என் மூச்சில் சுவாசத்தில்
நெஞ்சமெல்லாம் நனைகின்றதே!

நான்கொண்ட ஆசையெல்லாம்
நாட்களென்னி நகர்கின்றதே!

என் இதலோரப் புன்னகையில்
எண்ணங்கள் பிறக்கின்றதே!

மனம் தொட்ட மகிழ்வெல்லாம்
மறு ஜென்மமாய் சிலிர்கின்றதே!

சிவராசா தீபா
அரச கால்நடை வைத்தியர் அலுவலகம்
நாவிதன்வெளி

# காதலின் - கீதம்

சுந்தர உலகைச் செந்திற மாக்கும்
மந்திர இசையே மகிமை அதுவே
நாகரிகம் கற்பித்து நானிலம் உயிர்ப்பித்து
சாகாது சகம்வாழும் சந்தமும் அதுவே
இதயங்கள் இணைத்து இன்னிசை இசைத்து
உதயத்தை வழங்கும் உயர்பொருள் அதுவே
வாத்தியம் வேறெனினும் கீதம் ஒன்றாகி
அத்துவிதம் வளர்க்கும் தத்துவம் அதுவே
சாத்வீகம் பெருக்கிச் சத்தியம் தெரிவிக்கும்
நித்திய கானம் நிலமிடை அதுவே
வாழ்க்கைக்கு ஊட்டம் தருவதும் அதுவே
வாட்டமும் போக்கி வளமதுந் தருதே
சோர்ந்து அகிலம் சோதி இழக்கையில்
நாத உருவில் நலமுந் தருதே
காதல் கீதம் அண்டத்தின் விதையே.

தமிழ்க்கீரன்
கல்மடு, கல்குடா.

# கவிதைத் துறையில் ஆழமாக கால் பதித்து வரும் கவிஞ்ஞர்

# பத்மநாதன் டெனிஸ்ரன்





ஏ.எல்.எம்.ஷினாஸ், க.நீலநேந்திரன்
பிரதேச செயலகம் - நாவிதன்வெளி

பத்மநாதன் டெனிஸ்ரன் இவர், மருத தென்றல் தவழும் சொறிக்கல்முனை மண்ணை சேர்ந்தவர். ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா வரை கற்றுள்ளதுடன் திறந்த பல்கலைக்கழகத்தில் சமுகவிஞ்ஞான பாடத்திட்டத்தில் கலைமாணி பட்டநெறியினை தொடர்ந்து கொண்டிருக்கிறார். நாவிதன்வெளியில் நன்கு அறியப்பட்ட கவிஞராகவும் நாடக கலைஞராகவும் திகழும் இவர், பிரதானமாக கவிதை துறையில் நாட்டமுடையவராக இருந்தாலும் நாடக துறையிலும் அதிக ஆர்வமுள்ள ஒருவர். மேலும் ஆலயத்தில் வியாகுல பிரசங்கம் எனும் பக்திக்காப்பியம் பாடுவது மற்றும் சிறிய அளவில் சிலைகளுக்கு வர்ணம் தீட்டுதல், மேடைகளில் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்குதல் போன்ற கலைகளிலும் ஈடுபட்டு வருகின்றார். குறிப்பாக பாஸ்கா எனும் யேசு கொல்லப்படும் நிகழ்வினை சொறிக்கல்முனையில் நாடகமாக வருடாந்தம் காண்பிப்பதுண்டு. இந்த நிகழ்வில் படை தளபதி எனும் கதாபாத்திரத்தில் பதினைந்து வருடங்களாக நடித்து வருகின்றார்.

கலைத்துறை மீதான ஆர்வம் இவருக்கு சிறுவயது முதல் இருந்துள்ளது. உதாரணமாக ஆலயத்தில் பக்தி காப்பியம் பாடுதல் எனும் கலையினை தாய்வழி பாட்டன் ஒருவரிடமிருந்து கற்றுக்கொண்டார். இருப்பினும் பெரியளவில் தான் பாடசாலை காலங்களில் பரிணமித்ததில்லை என்கிறார். கவிதை போட்டிகள் போன்றவற்றில் கூட பங்குபற்றியதில்லை என்பதை ஆதங்கத்தோடு தெரிவித்த டெனிஸ்டன் தனது தந்தை கூறும் பழங்கதைகள் கூத்துப்பாடல்கள் நாட்டார்பாடல்கள் கொம்புமுறி பாடல்கள் என்பனவற்றை கேட்டே வளர்ந்ததாக தெரிவித்தார்.

க.பொ.த (சா/த) மற்றும் உயர்தரங்களிலே தமிழை ஒரு பாடமாக கற்றதோடு தமிழ் பாடம் கற்பித்த ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமை தனக்கு தமிழின் மீது குறிப்பாக கவிதை துறையின் மீதான நாட்டத்தினை அதிகப்படுத்தியது, மேலும் தமிழ் இலக்கிய நயம் எனும் பாடத்தில் தான் கற்ற கவிதைகள், ஒலி வடிவில் தான் கேட்ட கவிஞர் வைரமுத்துவின் கவிதைகள், கவிஞர் நா. பிச்சமூர்த்தியின் பூக்காரி போன்ற கவிதைகள் தமிழின் இனிமையினை ஒரு அழகுபடுத்தப்பட்ட மணப்பெண் கோலத்தில் காட்டியது. அதுவே கவிதை துறையில் தன்னை ஈர்த்தது என்கிறார்.

ஆனாலும் தன் வாழ்வில் திருப்பு முனையாக அமைந்த கவிதை, உயர்தர வேளையில் தனது நண்பனின் பாட்டியினுடைய இறப்புக்கு மரண இரங்கல் துண்டுப்பிரசுரத்தில் எழுதியிருந்த இவரது கவிதையில் தனது மருமகனால் தாக்கப்பட்டு இறந்தமையினை குறித்து "மருமகன் தான் உனக்கு மறுவுலக வாழ்வு காட்ட எமன் அனுப்பிய ஏவலன் ஆனான்" எனும் வரிகளை சுமந்த அந்தக்கவிதை பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் ஊரில் மூத்தோர் சிலரால் வெகுவாக பாராட்டப்பட்டது. அதனை தொடர்ந்து பாடசாலை மற்றும் ஊரில் நடக்கும் கௌரவிப்பு பிரியாவிடை போன்ற நிகழ்வுகளில் வாழ்த்துப்பாக்களை எழுதிக்கொடுத்தல் மேடை நிகழ்வுகளில் கவிதை சொல்லுதல் போன்ற சந்தர்ப்பங்களில் இன்னும் அதிகமாக தனது கவித்துறையினை வளர்த்துக்கொண்டதாக சுவரசியமாக கூறினார்.

இவர் தனது கவிதைகளை முகநூலில் பிரதியிட்டவேளை அதன் மூலமாக கிறிஸ்தவ சஞ்சிகையான தொண்டன் எனும் சஞ்சிகையின் இயக்குனர் அருட்தந்தை பயஸ் பிரசன்னா அவர்களின் வேண்டுகோளின் பெயரில் அந்த சஞ்சிகைக்கு ஆக்கங்களை எழுதி அனுப்ப தொடங்கினர். அது மாதாந்தம் பிரசுரிக்கப்படுகின்றது. மேலும் அந்த வருடத்திலே கிறிஸ்தவ மதவிவகார பண்பாட்டலுவல்கள் அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய விருதான "தர்ம பிரபாஸ்வர" எனும் கலைஞர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

மறைந்த கலைஞர் கலாபூசணம் அன்ரனி அவர்களின் அறிவுறையின் பேரில் நாவிதன்வெளி பிரதேச கலாச்சார உத்தியோகத்தர் மதிப்பிற்குரிய ஏ.எல். எம்.ஷினாஸ் அவர்களின் வழிப்படுத்தலின் பேரிலும் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற கவிதை போட்டிகளில் கடந்த 2022,2023,2024 ஆகிய வருடங்களில் திறந்த பிரிவு கவிதைப்போட்டியில் மூன்று வருடங்களும் முதல் இடம் பெற்று கௌரவிக்கப்பட்டுள்ளர். இதில் 2022ஆம் வருடம் இவர் எழுதியிருந்த "தீக்குளிக்கும் விட்டில்கள்" எனும் போதைப்பொருள் பாவனை பற்றிய கவிதை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திலும் முதலிடம் பெற்றது.

எனது கவித்துறை வட்டாரம் சிறியது தான், பல கவி மகா விருட்சங்களுக்கிடையில் நான் ஒரு புல் என என்னைப் பார்க்கிறேன். வாழும் நாளெல்லாம் கற்றுக்கொண்டு நிச்சயம் நான் என் எதிர்காலத்தில் விருட்சமாக நிற்காவிடினும் புல் எனும் நிலையில் இருந்து ஒரு செடி எனும் நிலையினை அடையும் வண்ணமேனும் நிச்சயம் உயர்ச்சியடைவேன். என்னை உயர்த்தி மகிழும் ஒவ்வொரு நல்ல உள்ளங்களுக்கும் நன்றிகள் என்று கூறி முடித்தார்.